Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, JUNE 24, 2021

வியாழக்கிழமை ஜூன் 24, 2021 | ஒளி: 07 கதிர் 30 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE

‘கொவிட் -19 தடுப்புச் செயலணி தோல்வி அடைந்துவிட்டது’

ரணில் தெரிவிப்பு: நாடு இராணுவமயமாகிறது என்கிறார்

■ பா.நிரோஸ்

இலங்கையை இராணுவமே நிர்வகிக்கிறது. இதனால், நாடு இராணுவ மயமாக்களுக்குச் சென்றுகொண்டிருக்கிறது என எச்சரித்த ஐ.தே.கவின் தலைவரும் அக்கட்சியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட கொவிட்- 19 தடுப்புச் செயலணி முழுமையாக தோல்விக் கண்டுள்ளது என்றார்.

“கொரோனா வைரஸ் ஒழிப்புப் பணிகளுக்கு அமைச்சரவையின் அதிகாரங்கள் பயன்படுத்தப்படாமை, அந்த அதிகாரங்கள் ஒழிக்கப்படுகின்றமை தொடர்பில் பாராளுமன்றத்தில் விவாதம் நடத்தப்படவேண்டும்” எனும் கோரிக்கையையும் முன்வைத்தார்.

புதிய எம்.பியாக, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில், சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட அவர், முதலாவது உரையை நேற்றையதினமே நிகழ்த்தினார். இதன்போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாராளுமன்ற வாழ்வை மீண்டும் ஆரம்பிப்பதற்கு வாய்ப்புக் கிடைத்தமைக்கு நன்றி தெரிவிப்பதாகவும், ஏழைகளைப் பட்டினியில் தள்ளிவிட்டுவிட்டு, முதலாளிகளுக்கு அரசாங்கம் வரிச் சலுகைகளை வழங்கியுள்ளளதாகவும் தெரிவித்தார். 2019ஆம் ஆண்டு அந்நிய செலாவணி 700 கோடி ரூபாயாக இருந்த நிலையில், தற்போது வெறும் 400 கோடி ரூபாய்க்கு அது குறைந்துள்ளது எனக் குறிப்பிட்ட அவர், “நாடு பாரிய கடன்களுக்குள் சிக்கியுள்ளது. சர்வதேச நாணய நிதியத்துடன் கொடுக்கல் வாங்கல்களை மீண்டும் ஆரம்பிப்பதே இதற்கு ஒரே தீர்வு” என்றார்.

இதில் அரசாங்கத்துக்கு உடன்பாடில்லை என்றால், மாற்று வழி என்ன என்பதை கூற வேண்டும். உரம், எரிபொருள் மற்றும் கல்வி உள்ளிட்ட பல பிரச்சினைகளுக்கு நாடு தற்போது முகங்கொடுத்துள்ளது. இப்பிரச்சினைகள் பூதாகரமானால் அரசாங்கம் மட்டுமல்ல இந்தப் பாராளுமன்றமும் இல்லாது போகுமெனவும் ரணில் எச்சரித்தார்.

எனவே, இது தொடர்பில் கலந்துரையாடுவதற்கு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். இதற்கெல்லாம் கொரோனா வைரஸ் நிலைமைகளே காரணம். கொரோனா வைரஸ் ஒழிப்பு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? எனவும் வினவினார்.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள கொவிட்-19 தடுப்பு தொடர்பான செயலணி ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல்,

தொடர்ச்சி P2

பிரசவ விடுமுறை நாள்கள் அதிகரிப்பு

பயிற்சி அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் 42 நாள்கள் பிரசவ விடுமுறையை 84 நாள்களாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்குமாறு, உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் கோரியுள்ளார்.

“2020ஆம் ஆண்டு இணைத்து க்கொள்ளப்பட்ட பயிற்சி பட்டதாரிகளுக்கு பிரசவ விடுமுறை 42 நாள்களாக வழங்கப்பட்டுள்ள நிலையில், அவர்களது விடுமுறையை ஏனைய அரச பணியாளர்களுக்குப் போன்று 84ஆக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது” என்றார்.

மேலும் இரண்டாவது மொழிப் பரீட்சை காரணமாக அனைத்து அரச அதிகாரிகளும் பாரிய அசௌகரியங்களுக்கு உள்ளாவதால், குறித்த பரிட்சைக்காக இரண்டாம் மொழி பாடத்திட்டத்தை அறிமுகப்படுத்தியதாகவும் தமிழ் மொழி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு பதிலாக, பாடத்திட்டத்தில் நிபுணத்துவத்தைப் பெற முடியும் என்றார்.

மின்சார பிரச்சினையா? உடன் அழையுங்கள்

■ கனகராசா சரவணன்

மின்சார முறைபாடுகள் குறித்து விசாரித்து தீர்வு காணும் வகையில், 0775 687 387 எனும்விசேட அலைபேசி இலக்கமொன்றை, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, நேற்று (23) அறிமுகப்படுத்தியுள்ளது.

நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள பயணக் கட்டுப்பாட்டுக்கு காரணமாக, மின்சாரப் பாவனையாளர்கள்

தமது முறைபாடுகளை குறித்த இலக்கத்துக்கு, வட்ஸ்அப், வைபர் மற்றும் இமோ மூலமாக மேற்கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

‘729 உடல்கள் நல்லடக்கம்’

■ எம்.எம்.அஹமட் அனாம்

கொரோனா தொற்றின் காரணமாக மரணமடைந்தவர்களில், இதுவரையிலும் 729 உடல்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளன என ஓட்டமாவடி பிரதேச சபை செயலாளர் எஸ்.எம்.சிஹாப்தீன் தெரிவித்தார்.

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் “மஜ்மா நகரில்” அமைந்துள்ள கொரோனா சடலங்களை

புதைக்கும் இடத்திலேயே நேற்று முன்தினம் (22) வரையிலும் இச்சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளன.

முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் 690, இந்துக்களின் பூதவுடல்கள்

தொடர்ச்சி P2

பிரேமதாஸவின் பிறந்த நாளன்று சபைக்கு தனியே சென்றார் ரணில்

13ஆவது ஆசனத்தில் அமர்ந்தார்: 307 நாளுக்குப் பின் பூர்த்தி

■ பா.நிரோஸ்

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரசிங்க, ஐ.தே. கவின் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக சபாநாயகர் முன்னிலையில் நேற்று (23) சத்தியப்பிரமாணம் செய்துக்கொண்டுள்ளார்.

சபாநாயகர் தலைமையிலான நேற்றைய (23) பாராளுமன்ற அமர்வை ஆரம்பித்து வைத்த சபாநாயகர் மஹிந்த

யாப்பா அபேவர்தன, புதிய உறுப்பினர் சத்தியப்பிரமாணம் செய்துகொள்வாரென அறிவிப்பு விடுத்தார்.

இதனைத் தொடர்ந்து சபைக்குள்,

தொடர்ச்சி P2

சபையின் நடுவே அமர்ந்து சஜித் அணி ஆர்ப்பாட்டம்

ரணிலுக்கு எதிரானது என ஆளும் தரப்புக் கிண்டல்

■ பா.நிரோஸ்

எரிபொருள்கள், அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டமையைக் கண்டித்து அரசாங்கத்துக்கு எதிராக, ஐக்கிய மக்கள் சக்தியினர், சபைக்குள் நேற்று (23) எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர். இதனால், வாய்மூல விடைக்கான

வினாக்கள் நேரத்தின் போது, சபையில் சற்று சலசலப்பு ஏற்பட்டிருந்தது.

தொடர்ச்சி P2

30 மணி நேரம் பயணக் கட்டுப்பாடு

நேற்றிரவு 10 மணிக்கு மீண்டும் அமுல்படுத்தப்பட்ட பயணக் கட்டுப்பாடுகள், 30 மணி நேரம் அமுலில் இருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே, அறிவிக்கப்பட்டதில் எவ்விதமான மாற்றங்களும் செய்யப்படவில்லை. இந்தப் பயணக் கட்டுப்பாடு, 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை 4 மணிக்கு தளர்த்தப்படும்.

தொடர்ச்சி P2

ரிஷாட், ரியாஜ் மனுக்கள் விவகாரம்

5 நீதியரசர் அடங்கிய குழாமில் 3 நீதியரசர்கள் விலகிவிட்டனர்

ஐக்கிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ரிஷாட் பதியுதீன் மற்றும் அவரது சகோதரர் ரியாஜ் பதியுதீன் ஆகிய இருவரினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுக்களை விசாரிப்பதிலிருந்து தான் விலகுவதாக உயர்நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம். டி. நவாஸ், நேற்று (23) நீதிமன்றுக்கு அறிவித்தார். சட்டவிரோதமாக தடுத்து

வைக்கப்பட்டுள்ள தங்களை உடனடியாக விடுதலை செய்யுமாறு கோரி,

தொடர்ச்சி P2

சபையின் நடுவே அமர்ந்து சஜித் அணி ஆர்ப்பாட்டம்

ரணிலுக்கு எதிரானது என ஆளும் தரப்புக் கிண்டல்

■ பா.நிரோஸ்

எரிபொருள்கள், அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டமையைக் கண்டித்து அரசாங்கத்துக்கு எதிராக, ஐக்கிய மக்கள் சக்தியினர், சபைக்குள் நேற்று (23) எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர். இதனால், வாய்மூல விடைக்கான

வினாக்கள் நேரத்தின் போது, சபையில் சற்று சலசலப்பு ஏற்பட்டிருந்தது.

தொடர்ச்சி P2

‘எதிர்கட்சித் தலைவர் விரைவில் மாறுவார்’

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் பாராளுமன்ற வருகையானது ஐக்கிய மக்கள் சக்திக்கு பெரும் சவாலாக அமையுமெனத் தெரிவித்த துறைமுகம் மற்றும் கப்பற்துறை அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன,

தொடர்ச்சி P2

உலகின் வேறு எந்த இனத்துக்கும்

‘அடிபணியாத இனமாக பௌத்தம் உருவெடுத்துள்ளது’

மஹிந்த தேரர் அறிமுகப்படுத்திய பௌத்தத்தின் உயிர்ச்சக்தி காரணமாக, உலகின் வேறு எந்த இனத்துக்கும் அடிபணியாத உயரிய இனமாக பௌத்தம் உருவெடுத்துள்ளது என்பதை நான் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொசன் பூரணை தின வாழ்த்துச் செய்தியிலேயே,

தொடர்ச்சி P2

தமிழ் அரசியல் கைதிகளில் சிலரை

‘பொசன் தினமான இன்று விடுவிக்கவும்’

சுமந்திரன் கோரிக்கை: நாமலுக்குப் பாராட்டு: ராகவனுக்கு வசைபொழிந்தார்

■ பா.நிரோஸ்

அரசியல் கைதிகள் பற்றி, கடந்த 11 வருடங்களாக பேசிக்கொண்டிருக்கின்றோம். எதிரணியில் இருக்கும் எங்களுடைய அழுதங்களால், 100 கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன்,

தொடர்ச்சி P2

‘கொரோனாவை தவறாக நிர்வகித்தால் உயிரிழப்புகள் இன்னும் அதிகரிக்கும்’

■ பா.நிரோஸ்

கொரோனா வைரஸ் மற்றும் நாட்டின் சட்டங்கள் தொடர்பில் இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வாவுக்கு என்ன தெரியுமென வினவிய பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன், கொரோனா வைரஸ் நிலைமைகளை அரசாங்கம் தொடர்ந்து தவறாக நிர்வகித்தால், உயிரிழப்புகள் இன்னுமின்னும் அதிகரிக்குமென எச்சரித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர், “கொரோனா வைரஸ் ஒழிப்புப் பணிகளில், வைரஸ் தொடர்பில் நிபுணத்துவம் கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ விதாரணவை அரசாங்கம் பயன்படுத்திக்கொள்ளாது, இராணுவத் தளபதியைப் பயன்படுத்தி வருகிறது” என்றார்.

தொடர்ச்சி P2

பை, செருப்பை கழற்றிவிட்டு கல்லடியில் குதித்தவர் மீட்பு

■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பு, கல்லடி பாலத்தின் மேல் இருந்து வாவிக்குள் நேற்று (23) பிற்பகல் 3 மணிக்கு குதித்த இளைஞனை, வாவியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மீட்டு, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

களுவாவளை 4ஆம் சிறி முத்துமாரியமன் கோவில் வீதியைச் சேர்ந்த 32 வயது இளைஞனே இவ்வாறு



காப்பாற்றப்பட்டுள்ளார் என காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த இளைஞன், தான் கொண்டுவந்த பை மற்றும் செருப்பு ஆகியனவற்றை,

தொடர்ச்சி P2

‘யாழ். மாவட்டத்தில் கொரோனா கூடியது’

■ நிதர்ஷன் வினோத்

யாழ். மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 4 ஆயிரத்து 919 ஆக அதிகரித்துள்ளது எனத் தெரிவித்த யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன், தொற்றாளர்களாக இனங்காணப்பட்டவர்களில், சுமார் 3 ஆயிரத்து 696 போர் குணமடைந்து வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர் என்றார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

‘கொவிட் -19 தடுப்புச் செயலணி தோல்வி அடைந்துவிட்டது’

இன்று வரையில் முழுமையாகத் தோல்வியடைந்துள்ளது.

இந்தச் செயலணி தோல்வியடைந்துள்ளதால், இதனைக் கொண்டு முன்னோக்கிச் செல்ல முடியாது. உலக சுகாதார ஸ்தாபனத்தில் உள்ளதுபோல, விசேட நிபுணர்களைக் கொண்ட குழு, இலங்கையில் இல்லை. இராணுவத் தளபதியால் எவ்வாறு கொரோனா வைரஸ் ஒழிப்புப் பணிகளை முன்னெடுக்க முடியும்? எனவும் வினவினார்.

கொரோனா வைரஸ் ஒழிப்புப் பணிகளை முன்னெடுக்க ஏன் அமைச்சரவைக்கு அதிகாரம் வழங்கப்படவில்லை. அரசியலமைப்பின் பிரகாரம், அமைச்சரவைக்கே இந்த அதிகாரங்கள் வழக்கப்பட்டிருக்க வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தினார்.

“இராணுவ அதிகாரங்களைக் கொண்டு இலங்கை ஆட்சி செய்யப்படுகிறது. அது தவறு. இராணுவ அதிகாரங்களைக் கொண்டு எவ்வாறு நாட்டை ஆள முடியும்? முதலீட்டு வலயத்தில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றில், நிதி அமைச்சரோ அல்லது அதற்குப் பொறுப்பான இராஜாங்க அமைச்சரோ கலந்துகொள்ளவில்லை. ஆனால், இராணுவத் தளபதி அதில் கலந்துகொள்கிறார்.

“இராணுவத் தளபதியுடன் எந்தவிதமானப் பிரச்சினைகளும் இல்லை. அவர் எனக்கு உதவிகள் செய்துள்ளார். ஆனால், நாடு இராணுவ மயமாக்கப்படுகிறது” என்றார்.

“நாட்டை நிர்வகிப்பதற்கான ஆணையை மக்கள் அரசாங்கத்துக்கு வழங்கியிருக்கிறார்கள். ஆனால், அரசாங்கம் அந்த ஆணையை ஏன் இராணுவத்திடம் வழங்கி, நாட்டை இராணுவ மயமாக்கிறது” எனவும் அவர் இதன்போது கேள்வி எழுப்பினார்.

“கொரோனா வைரஸ் ஒழிப்புப் பணிகளுக்கு அமைச்சரவையின் அதிகாரங்கள் பயன்படுத்தப்படாமையும், அந்த அதிகாரங்கள் இல்லாதொழிக்கப்படுவது, மக்கள் ஆணையை இல்லாதொழிக்கப்படுவது தொடர்பிலும் சபையில் விவாதமொன்றை வழங்க வேண்டும்” என ரணில் இதன்போது கோரிக்கை விடுத்தார்.

மின்சார பிரச்சினையா? உடன் அழையுங்கள்

பாவனையாளர்கள் தங்கள் எழுத்து மூலமான முறைப்பாடுகளை ஒரு புகைப்படம் எடுத்து, மேற்குறித்த சமூக வலைத்தளங்களின் ஊடாக பதிவேற்றலாம் எனவும் அல்லது குறுந் தகவலாக டைப் செய்து சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

குறுகிய காலத்தில் சிறப்பான சேவையைப் பெற்றுக்கொடுப்பதற்கு பெயர், முகவரி, அலைப்பேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி (இருப்பின்), மின்சாரக் கணக்கு இலக்கம், முறைப்பாடு விவரம், தொடர்புடைய இணைப்புகள் (இருப்பின்) ஆகியவற்றை குறிப்பிடுமாறும் பாவனையாளர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

முறைப்பாடு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், குறிப்பு இலக்கமொன்று பாவனையாளர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய அதிகாரிகளை நேரில் சந்திப்பதை தவிர்த்து, ஒன்லைன் மற்றும் சமூக வலைத்தளங்கள் ஊடாக அதிகாரிகளைத் தொடர்புகொள்ளுமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

‘729 உடல்கள் நல்லடக்கம்’

15, கிறிஸ்தவர்களின் பூதவுடல்கள் 15, பௌத்தர்கள் பூதவுடல்கள் 07 அடக்கம் செய்யப்பட்டுள்ளன.

வெளிநாட்டவர்களின் சடலங்கள் இரண்டும் அதில் அடங்குகின்றன என பிரதேச சபை செயலாளர் மேலும் தெரிவித்தார்.

சபையின் நடுவே....

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியினர், பல்வேறான கோஷங்களை எழுப்பியவாறும், பதைதைகளை ஏந்திப் பிடித்தவாறும், சுமார் ஒரு மணி நேரம் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

ஒரு சந்தர்ப்பத்தில் சபைக்குள் இறங்கியவர்கள், சபாநாயகர் அருகில் வந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் செய்தனர். இன்னும் சிலர் சபைக்கு நடுவே அமர்ந்திருந்தவாறு கோஷங்களை எழுப்பிக்கொண்டிருந்தனர்.

“அரசாங்கம் இறந்துவிட்டது; கோட்டா முடிந்துவிட்டார்”, “நாட்டைக் காக்கம் மனிதன், உரத்தை கொஞ்சம் தின்றான்”, “அரசாங்கம் நஞ்சானது”, “ எரிபொருள், அத்தியாவசிய பொருள்களின் விலைகளைக் குறைக்கவும்” ஆகிய சுலோகங்கள் எழுதப்பட்ட பதாதைகளைளே ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.

இதன்போது, ஆளும் கட்சியைச் சேர்ந்த சிலர், ஆர்ப்பாட்டக்காரர்களுடன் தர்க்கத்தில் ஈடுபட்டனர். ஆளும் கட்சியைச் சேர்ந்த சாந்த பண்டார கேள்வியொன்றைக் கேட்டிருந்தார். அக்கேள்விக்கான பதில்கள், சபையில் ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளதாக விடயதானத்துக்குப் பொறுப்பான அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிலையில், ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பிய ஆளும் கட்சியின் எம்.பியான சாந்த பண்டார,

“இவர்கள், இன்று (நேற்று) ரணில் விக்கிரமசிங்க எம்.பியாக பதவிப்பிரமாணம் செய்தமையை எதிர்த்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். ரணிலுக்கு இவர்கள், அஞ்சுகின்றனர். ஆனால், நாங்கள் அவருக்கு (ரணிலுக்கு) வாழ்த்துத் தெரிவிக்கின்றோம்” என்றார்.

அந்த ஒரு மணி நேரத்துக்குள் வாய்மூல விடைக்கான நேரம் நிறைவடைந்தது. ஐக்கிய மக்கள் சக்தியினரால் கேட்கப்பட்டிருந்த எந்தவொரு கேள்வியும் நேற்று (23) கேட்கப்படவில்லை, சில கேள்விகளுக்கு கால அவகாசத்தை கேட்ட அரசாங்கம், இன்னும் சில கேள்விகளுக்கான பதிலை சபையில் ஆற்றுப்படுத்தியது.

இந்நிலையில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஏற்கெனவே, கேட்டிருந்த கேள்விக்குப் பதிலளித்த சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியராச்சி, “எதிரணியின் செயற்பாடு கண்டிக்கத்தக்கது” எனக் கூறியமர்ந்தார்.

பிரேமதாஸவின் பிறந்த...

முக்கவசம் அணிந்து வந்த ரணில் விக்கிரமசிங்கவுக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து மரியாதை செலுத்தினார்கள்.

இதன் பின்னர் சபாநாயகர் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துக்கொண்ட ரணில், பாராளுமன்ற செயலாளர் நாயகம் முன்னிலையில் பாராளுமன்ற உறுப்பினர் பதிவேட்டிலும் கையெழுத்திட்டு, சபாநாயகர் மஹிந்த யாப்பாவிடம் வாழ்த்துகளையும் பெற்றுக்கொண்டார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியை தழுவிய கையோடு, சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி உருவானது. ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சிக்கு தொடர்ந்து தலைவரானார்.

ஐ.தே.கவிலிருந்து ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் பலர் வெளியேறியிருந்த நிலையிலும், தனித்துப் போட்டியிட்டு பொதுத்தேர்தலிலும் படுதோல்வியடைந்து தேசியப்பட்டியல் ஒன்றை மாத்திரம் கைப்பற்றியிருந்தது.

ஒன்பதாவது பாராளுமன்றம் 2020ஆம் ஆண்டு ஓகஸ்ட் 20ஆம் திகதி கூடியிருந்தாலும், ஐக்கிய தேசிய கட்சிக்குக் கிடைத்திருந்த தேசியபட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு எவரும் அப்போது தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

இந்நிலையில், பாராளுமன்ற கூட்டத்தொடர் ஆரம்பமாகி 307 நாள்களுக்குப் பின்னர் ஐ.தே.க எம்.பியாக ரணில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

பிரதமர், அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சர், எதிர்க்கட்சி தலைவரென பல பதவிகளுடன் கடந்த 42 வருடங்களாக பாராளுமன்றத்துக்கு வந்த ரணில் விக்கிரமசிங்க, தனியாளாக ஐ.தே.கவின் தலைவர் பதவியை மாத்திரம் வைத்துக்கொண்டு, சபைக்கு தற்போது வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அவருக்கு எதிர்க்கட்சியின் முன்வரிசையில் 13ஆம் இலக்க ஆசனம் ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மறைந்த முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ, 1989ஆம் ஆண்டு முதல் 1993 ஆம் ஆண்டு வரையிலும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக இருந்தார். அவருடைய பிறந்தநாள் நேற்றாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

5 நீதியரசர் அடங்கிய குழாமில்....

ரிஷாட்டும் அவரது சகோதரரும் தனித்தனியாக தாக்கல் செய்த இந்த மனுக்கள், பிரிதி பத்மன் சூரசேன, ஏ.எச்.எம்.டி. நவாஸ் மற்றும் அச்சல வெங்கப்புலி ஆகியோரைக் கொண்ட மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியர்கள் அடங்கிய குழாமால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவிருந்தன.

எனினும், தனிப்பட்ட காரணங்களுக்காக தான் இந்த மனுக்களை விசாரிக்கும் குழாமிலிருந்து விலகுவதாக உயர்நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம்.டி. நவாஸ் தெரிவித்தார்.

இந்தக் காரணத்தால் குறித்த மனுக்களை ஆராய்வது அடுத்த மாதம் 6ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளது.

இந்த மனுக்களை விசாரிப்பதிலிருந்து உயர்நீதிமன்ற நீதிபதிகளான ஜனக் த சில்வா மற்றும் யசந்த கோதாகொட ஆகியோர் தனிப்பட்ட காரணங்களுக்காக ஏற்கெனவே விலகியிருந்தனர்.

சட்டவிரோத செயற்பாடுகளுடன் தொடர்புபடாத தன்னை கைதுசெய்து, பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைத்திருப்பது சட்டவிரோதமானது என ரிஷாட் மற்றும் அவரது சகோதரரால் அடிப்படை உரிமை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த மனுக்களில், இரகசிய பொலிஸ் பணிப்பாளர், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர், அந்த அமைச்சின் செயலாளர், பாதுகாப்பு செயலாளர், பொலிஸ்மா அதிபர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மனுதார்ர்கள் சார்பில் சட்டத்தரணி கௌரி சங்கரி தவராஜாவின் ஆலோசனைக்கமைய ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா ஆஜராகியுள்ளார்.

‘எதிர்கட்சித் தலைவர் விரைவில் மாறுவார்’

எதிர்க்கட்சி தலைவர் பதவியிலும் வெகுவிரைவில் மாற்றம் ஏற்படுமென எதிர்பார்க்கிறோம் என்றார்.

ரணில் விக்ரமசிங்கவின் பாராளுமன்ற பிரவேசம் குறித்து ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“அரசாங்கத்துக்கும் ரணிலுக்கும் இடையில், எவ்விதமான தொடர்பும் இல்லையெனத் தெரிவித்த அவர், நல்லாட்சி அரசாங்கத்தை, நாட்டு மக்கள் ஜனநாயக ரீதியில் முழுமையாக புறக்கணித்துள்ளனர்” என்றார்.

“ரணில், சிறந்ததோர் அரசியல்வாதி. ஆனால், அரசாங்கத்தின் அனைத்து செயற்பாடுகளையும் எதிர்க்கும் கொள்கையை ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான எதிர்க்கட்சியினர் கொண்டுள்ளனர்” என்றார்.

இதேவேளை, “வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியினர் கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை வெற்றி கொள்ளமுடியும். அரசாங்கத்துக்குள் கருத்து முரண்பாடுகள் காணப்படுகிறன. பல்வேறு கொள்கையைக் கொண்ட கட்சிகள் ஒன்றிணைந்து அரசாங்கத்தை அமைக்கும் போது கருத்து முரண்பாடுகள் தோற்றம் பெறுவது இயல்பு. இக்கருத்து முரண்பாடு அரசாங்கத்தை ஒருபோதும் பலவீனப்படுத்தாது” என்றார்

30 மணி நேரம் பயணக் கட்டுப்பாடு

30 நாள்களுக்குப் பின்னர், பயணக் கட்டுப்பாடுகள் மூன்று நாள்களும் முழுமையாக தளர்த்தப்பட்டன. இந்த 30 மணி நேரத்தில், மாகாணங்களுக்கு இடையில் பயணிப்பதற்காக கட்டுப்பாடு, அவ்வாறே அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்காலப்பகுதியில் மேல் மாகாணத்தில் இயங்கும் அரச நிறுவனங்களுக்கு, அத்தியாவசிய தேவைகளின் பிரகாரம் மட்டுமே பணியாளர்களை அழைப்பிக்க வேண்டும். தனியார் நிறுவனங்களுக்கு குறைந்த எண்ணிக்கையிலான ஊழியர்களை கடமைகளுக்கு அழைப்பிக்க முடியும். ஏனைய பணியாளர்களை, வீட்டிலிருந்து வேலை செய்யும் முறைமைக்கு ஊக்குவிக்கவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடுகள் அவ்வாறே அமுல்படுத்தப்பட்டாலும் தங்களுக்கு நெருக்கமான உறவினர்களின் மரண வீடுகளுக்குச் செல்வதற்கான அனுமதி வழங்கப்படும். எனினும், அதற்கு சரியான அத்தாட்சியைக் காண்பிக்கவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

‘கொரோனாவை தவறாக....

வைரஸைப் பற்றி இராணுவத் தளபதிக்கு எதுவுமே தெரியாதென திஸ்ஸ விதாரண எம்.பி கூறுகிறார். உண்மையில் இராணுவத் தளபதிக்கு வைரஸ் பற்றி என்ன தெரியும் என சுமந்திரன் எம்.பி வினவினார்.

இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்ணான்டோ புள்ளேவுக்கும் உரிய பதவிகளை அரசாங்கம் வழங்கவில்லை எனவும் அவர் இதன்போது குற்றஞ்சுமத்தினார்.

பயணக்க ட்டுப்பாடுகள், நாடு முடக்கப்படுவது தொடர்பில் இராணுவத் தளபதியே அறிவிப்பு விடுக்கிறார். இராணுவத் தளபதிக்கு என்ன தெரியும்? அவருக்கு நாட்டின் சட்டம் தெரியுமா? ஜனாதிபதி ஊடகப்பிரிவா நாட்டின் சட்டத்தை இயற்றுகிறது? எனவும் கேள்விகளைக் கேட்டார்.

கொரோனா வைரஸ் நிலைமைகளை அரசாங்கம் தவறாக நிர்வகிக்கிறது. இதனாலேயே நாட்டில் கொரோனா வைரஸின் மூன்றாவது அலை உருவாகியுள்ளது. கொரோனா வைரஸ் நிலைமைகளை முறையாகத் நிர்வகிக்கத் தவறினால், 4ஆவது அலையும் வரும் இதனால் அதிகளவான உயிரிழப்புகள் ஏற்படுமென எச்சரித்தார்.

சுகாதாரப் பிரிவினரும், சுகாதார நிபுணர்களும் கொரோனா வைரஸ் பணிகளில் ஈடுபடுத்தப்பட வேண்டும். கொரோனா வைரஸ் நிலைமைகளைக் கையாள்வதற்கு ஏனைய நாடுகளைப் போல, இலங்கையின் பாராளுமன்றத்தில் சட்டங்கள் எவையும் இயற்றப்படவில்லை என்றார்.

இராணுவத் தளபதி தூங்கி எழுந்து, பிரச்சினைகளை எப்படி கையாள்வதென சிந்திப்பதற்காகவும் அதற்காக சட்டங்களை இயற்றுவதற்கும் அரசியலமைப்பின் பிரகாரம் அனுமதியில்லை என்றார்.

பை, செருப்பை கழற்றிவிட்டு....

பாலத்தின் மேல் வைத்துவிட்டு வாவியில் குதித்துள்ளார்.

இதனை, அப்பகுதியில் தோணியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் கண்டு, உடனடியாக வாவியில் குதித்து இளைஞனைக் காப்பாறிக் கரைசேர்த்து, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதித்துள்ளனர்.

இந்நிலையில், இச்சம்பவம் தொடர்பான விசாணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

‘பொசன் தினமான...

பொசன் போயா தினத்தன்று, முடிந்தால் சிலரை விடுதலை செய்யுங்கள் எனக் கேட்டுக்கொண்டார்.

அரசியல் கைதிகளை விடுதலை செய்வோம், விடுதலை செய்வோமென தொடர்ந்து கூறிக்கொண்டிருக்காது, முடிந்தால் அவர்களை விரைவில் விடுதலை செய்துகாட்டுங்கள் எனவும் அமைச்சர் நாமல் ராஜபக்ஷவுக்கு பகிரங்கமாக சவால் விடுத்தார்.

அரசாங்கத்தின் அத்தியாவசிய செலவீனங்கள், கொரோனா தொற்று நோயைக் கட்டுப்படுத்துவதற்காக முன்வைக்கப்பட்டுள்ள குறைநிரப்பு மதிப்பீடு மீதான விவாதத்தில் நேற்றுக் கலந்துக்கொண்டு உரையாற்றும்போதே, சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை, அரசியல் கைதிகள் விவகாரம் தொடர்பில் ஆளுங்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவின் சமூக வலைத்தளப் பதிவையும் சுமந்திரன் சுட்டிக்காட்டி உரையாற்றியதால், சுரேன் ராகவனுக்கும் சுமந்திரனுக்கும் சபையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய சுமந்திரன், தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வோமென அரசாங்கம் தொடர்ந்து கூறிவருவதைப் பார்த்தால், அவர்களை விடுதலை செய்ய மாட்டார்கள் என்கிற சந்தேகமே எமக்கு ஏற்படுகிறது.

வெறும் 6 மாதங்களுக்கு மாத்திரம் தற்காலிகமாகவே பயங்கரவாதத் தடைச் சட்டமானது 1979ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. பின்னர் இச்சட்டம் 1982ஆம் ஆண்டு நீடிக்கப்பட்டாலும், பயங்கரவாதத் தடுப்பு தற்காலிக ஏற்பாடுகள் சட்டமென்றே அதன் தலைப்பு இருப்பதாகவும் தெரிவித்தார்.

“தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வோமென வார்த்தையில் கூறிக்கொண்டிருக்காது, அதனை செயலில் காட்டுங்கள். இதுத் தொடர்பில் விசேட கூற்று ஒன்றை முன்வைத்து உரையாற்றிய நாமல் ராஜபக்ஷவின் உரையை வரவேற்கிறோம்.

நாளை (இன்று 24) பொசோன் போயா தினம். இந்தத் தினத்தில் தமிழ் அரசியல் கைதிகள் சிலரை விடுதலை செய்துகாட்டுங்கள். ஏனையோரையும் விரைவில் விடுதலை செய்யுங்கள். இதனை செய்துகாட்டுங்கள் என தான் நாமல் ராஜபக்ஷவுக்கு சவால் விடுக்கிறேன்” எனவும் சுமந்திரன் கடுந்தொனியில் தெரிவித்தார்.

அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டுமென ஆளுங்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் தற்போது கூறுகிறார். அரசாங்கத்தின் பதவிகளைப் பெறுவதற்காக அரசாங்கத்தின் முன்பாக சுரேன் ராகவன் முழங்காலிட்டு கிடக்கிறார் என்றார்.

உங்களால் எத்தனை பேரை விடுதலை செய்ய முடியுமென நாம் பார்க்கத்தானே போகிறோம். அரசியல் கைதிகளில் விடயத்தில் அரசியல் செய்வது சுரேன் ராகவன்தான் எனவும் தெரிவித்தார்.

இதன்போது ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய சுரேன் ராகவன், “15 வருடங்களாகப் பாராளுமன்றில் இருக்கிறீர்கள் இந்த விடயத்தில் நீங்கள் என்ன செய்துள்ளீர்கள். எனவும் தெரிவித்தார்.

இந்த விடயத்தில் நான் என்ன செய்தேன் என்று சொல்கிறேன். குரைத்துக்கொண்டிருக்காது அமருங்களென இதன்போது தெரிவித்த சுமந்திரன், நான் 15 வருடங்கள் பாராளுமன்றத்தில் இருக்கவில்லை. 11 வருடங்களாகவே பாராளுமன்றில் இருப்பதாகவும் தெரிவித்தார்.

எல்லா பாராளுமன்ற அமர்வுகளிலும் எதிர்க்கட்சிகளில் அமர்ந்துகொண்டு அரசியல் கைதிகளை விடுதலை வலியுறுத்தி வந்திருக்கிறோம். எதிர்க்கட்சியாக எங்களால் அதனையே செய்ய முடிந்துள்ளது. நீங்கள் ஒரு கொள்கை இல்லாதவர் எனவும் விமர்சித்தார்.

‘அடிபணியாத இனமாக...

அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தூய்மையான பௌத்த மதத்தை பின்பற்றி நல்லிணக்கத்துடன் வாழ எங்களுக்கு வழிகாட்டிய மஹிந்த தேரரின் இலங்கை வருகையை இந்த உன்னத பொசன் பூரணை தினத்தில் மிகுந்த கௌரவத்துடன் நினைவு கூர்கின்றேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

“தர்மாசோக மன்னனுக்கும், தேவனம்பியதீசனுக்கும் இடையிலான இராஜதந்திர நட்பின் சிறந்த விளைவாக இலங்கையில் பௌத்த சமயம் ஸ்ரீ புத்த ஆண்டு 236இல் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்மூலம் எமது இனம், மதம் மற்றும் கலாசாரத்தின் புதிய யுகம் தோற்றம் பெற்றது. “பௌத்த கலாசாரத்தில் கலை, கல்வி, பகுத்தறிவு, விவசாயம் ஆகிய அனைத்துத் துறைகளும் வளர்ச்சியடைந்தன” என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார் “வேறு தினங்களில் பொசன் பூரணை தினத்தில் பக்தர்களால் நிறைந்து காணப்படும் மிஹிந்தலை புனித பூமி, இன்று அவ்வாறு

‘யாழ். மாவட்டத்தில் கொரோனா கூடியது’

யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று (23) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துரைத்த போதே, மேற்கண்டவாறு தெரிவித்த அவர், கொரோனா தொற்றினால், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இதுவரையிலும் 72 பேர் மரணமடைந்துள்ளனர் என்றார்.

கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டதை அடுத்து, உடுவில் மற்றும் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுகளில் இரண்டு கிராமங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன எனத் தெரிவித்த அவர், மாவட்டத்தில் தற்போது 2 ஆயிரத்து 721 குடும்பங்களை சேர்ந்த 8 ஆயிரத்து 71 நபர்கள் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளர் என்றார்.

மேலும், “வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு தற்போது வழங்கப்படும் 5,000 ரூபாய் கொடுப்பனவு, யாழ். மாவட்டத்தில் இதுவரை 71 ஆயிரத்து 721 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது” எனவும் தெரிவித்தார்.

‘கொரோனா உயிரிழப்புக்கள் 10 மடங்காக அதிகரிக்கும்’

பா.நிரோஸ்

கொரோனா வைரஸால் தொற்றுக்குள்ளாவோர், உயிரிழப்போரின் எண்ணிக்கை இந்த வருடத்துக்குள்ளேயே 10 மடங்காக அதிகரிக்கலாமென நிபுணர்கள் கருதுவதாகத் தெரிவித்த வைரஸ்கள் தொடர்பான நிபுணரும் பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரன, மந்த போசனை நாட்டில் அதிகரித்துள்ளதால், அபிவிருத்தித் திட்டங்களைத் தள்ளிவைத்துவிட்டு, நாட்டு மக்களுக்கு உணவளிக்க வேண்டும் என்றார்.

அரசாங்கத்தின் அத்தியாவசிய செலவீனங்கள், கொரோனா தொற்று நோயைக் கட்டுப்படுத்துவதற்காக முன்வைக்கப்பட்டுள்ள குறைநிரப்பு மதிப்பீடு மீதான விவாதத்தில் நேற்றுக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே பேராசிரியர் திஸ்ஸ விதாரன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், கொரோனா வைரஸ் தொற்று கொத்தணியாக இல்லாது சமூகப் பரவலாக இலங்கையில் மாற ஆரம்பித்துள்ளதாக கடந்த ஆறு மாதங்களுக்கு முன்பாகவே, நான் சுகாதார அதிகாரிகளிடம் தெரிவித்திருந்தேன் என்றார்.

நாட்டில் மந்த போசனையும் நூற்றுக்கு 18 சதவீதமாக அதிகரித்துள்ளது. எனவே நாட்டில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களைச் சற்று தள்ளிவைத்துவிட்டு மக்களுக்கு உணவுகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

இதுவரையில் கொரோனா தொற்றுக்குள்ளானோர், தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை இந்த வருடத்துக்குள்ளேயே 10 மடங்குகளாக அதிகரிக்குமென நிபுணர்கள் கருதுவதாகவும் பேராசிரியர் திஸ்ஸ விதாரன தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் நிலைமைகள் இன்னும் ஓரிரு வருடங்களுக்காவது நீடிக்கும். எனவே தொலைக் காட்சியூடாக நாட்டிலுள்ள அனைத்து மாணவர்களுக்கு கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

பாராளுமன்றில் உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களையும் கொண்ட குழு ஒன்றை உருவாக்கி, அதனூடாகக் கொரோனா வைரஸ் ஒழிப்புப் பணிகளை முன்னெடுக்க வேண்டும். இதன்படி கிராம மட்டங்களிலும் கொரோனா குழுக்களை உருவாக்கி அதனூடாக மக்களுக்கு சரியான சுகாதார அறிவுறுத்தல்களை வழங்க முடியும் என்றார்.

கொரோனவினால் ஏற்படும் ‘மரணங்களை அரசாங்கம் மக்களுக்கு அறிவிக்கிறது’

பா.நிரோஸ்

மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து இலங்கைக்கு வந்தவர்களிடமிருந்தே, பிரித்தானிய வைரஸ் இலங்கைக்குள் வந்துள்ள தாகத் தெரிவித்த சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, தொற்றாளர்கள், தொற்றால் இறப்பவர்களின் உண்மைத் தகவல்களையே அரசாங்கம் பொதுமக்களுக்கு வழங்குகிறது என்றார்.

பாராளுமன்றத்தில் நேற்றைய அமர்வில் கலந்துகொண்டு, சுகாதார அமைச்சின் விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், திரிபு அடைந்துவரும் கொரோனா வைரஸ் தொற்றை கட்டுப்படுத்த உலகளாவிய உயிரியல் பாதுகாப்பு குழு முறையுடன் இணைந்து, அரசாங்கமும் சுகாதாரத்துறையும் பணியாற்றும் என்றார்.

இனங்காணப்படும் கொரோனா வைரஸ் தொற்றாளர், உயிரிழக்கும் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் தொடர்பில் பொதுமக்களுக்கு உண்மையான தகவல்களையே அரசாங்கம் வழங்கி வருகிறது.

இதேவேளை, 38 இலட்சத்துக்கும் அதிகமானப் பிசிஆர் பரிசோதனைகளில், இம்மாதம் 20ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் மாத்திரம் இரண்டு இலட்சத்தி 17ஆயிரத்துக்கும் அதிகமான தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இலங்கையில் இனங்காணப்பட்டுள்ள பிரத்தானியக் கொரோனா வைரஸ் திரிபானது, மத்தியக் கிழக்கிலிருந்து வந்தவர்களிடமிருந்தே இலங்கைக்குள் வந்திருக்க வேண்டுமெனவும் தெரிவித்த அமைச்சர், தாம் புதிய சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்களை இதற்கென உருவாக்கியிருக்கிறோம். அதன்படியே செயற்படுவோம் என்றார்.

அத்தியாவசியப் பொருட்களின் விலையை ‘யாராலும் கட்டுப்படுத்த முடியாது’

பா.நிரோஸ்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவாலோ, இராணுவத் தளபதி ஷவேந்திர சில்வாவினாலோ சந்தைகளில் உள்ள அத்தியாவசியப் பொருள்களின் விலைகளைக் கட்டுப்படுத்த முடியாதென ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

கொரோனா தொற்று நோயைக் கட்டுப்படுத்துவதற்காக முன்வைக்கப்பட்டுள்ள குறைநிரப்பு மதிப்பீடு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ, பாராளுமன்றத்தில் எதைச் சொன்னாலும், எத்தகைய சட்டங்களைக் கொண்டு வந்தாலும், வர்த்தமானி அறிவித்தல்கள் வெளியிடப்பட்டாலும் சந்தைகளில் உள்ள அத்தியாவசியப் பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்த முடியாதென்றார்.

சந்தைகளில் காணப்படும் பொருள்களின் விலைகளை ஜனாதிபதியாலோ, இராணுவத் தளபதியாலோ கட்டுப்படுத்த முடியாது. வர்த்தமானி அறிவித்தல்கள் வந்தாலும் சேர் என்று கூறினாலும் அரிசி விலையைக் கட்டுப்படுத்த முடியாது. எனவே, இது தொடர்பில் கலந்துரையாடாது டொலர் விலை தொடர்பில் பேசுவதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ தெரிவித்தார்.

‘அம்பியூலன்ஸ்களில் கொள்ளையா?’

கொரோனா இட்டுகம நிதியத்துக்குக் கிடைத்த பணத்தில் அம்பியூலன்ஸ்கள் கொள்வனவு தொடர்பில் சுகாதார அமைச்சர் ஒரு கருத்தையும், ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு மற்றொரு கருத்தையும் கூறுவதாக தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரவித்தார்.

அரசாங்கத்தின் அத்தியாவசிய செலவீனங்கள் மற்றும் கொரோனா தொற்றுநோயைக் கட்டுப்படுத்துவதற்காக முன்வைக்கப்பட்டுள்ள குறைநிரப்பு மதிப்பீடு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், கொரோனா ‘இட்டுகம’ நிதியத்துக்கு கிடைத்தப் பணத்தில் 23 வீதத்தை அம்பியூலன்ஸ் கொள்வனவுக்காக செலவழித்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவிக்கிறது என்றார்.

ஆனால் சுகாதார அமைச்சர் இன்னும் அம்பியூலன்ஸ கொள்வனவுக்கான ஆவணங்கள் கூட தயாரிக்கவில்லை என சபையில் கூறுகிறார் என்றும், எனவே இந்த விடயத்திலும் மக்களின் பணம் கொள்ளையிடப்பட்டுள்ளதாக எனவும் அவர் வினவினார்.

ஒரு துளி அரிசியையும் இறக்குமதி செய்யப்போவதில்லை எனக் கூறிய அரசாங்கம் தற்போது வெளிநாடுகளில் இருந்து அரிசியை இறக்குமதி செய்ய தீர்மானித்துள்ளது. அரசாங்கத்தின்தேசிய பொருளாதார கதைகள் வெறும் வாய்ப் பேச்சு மட்டுமே என்றார்.

எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. பெற்றோலிய கூட்டுத்தாபனம் நட்டத்தில் இயங்குவதாக அரசாங்கம் கூறுகிறது. ஐ.ஓ.சி 88 கோடி ரூபாய் இலாபத்தை ஈட்டியுள்ளது எனவும், இவ்வாறான நிலையில் எவ்வாறு பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நட்டத்தில் இயங்குமெனவும் வினவினார்.

பாகங்கள் செயலிழந்து; ‘நிமோனியா நிலைக்கு அரசாங்கம் சென்றுள்ளது’

நாட்டின் பொருளாதார நெருக்கடிகளுக்கு, கொரோனா வைரஸ் காரணமல்ல எனத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம், அரசாங்கத்தின் பொருளாதார முகாமைத்துவமின்மையே பொருளாதார நெருக்கடிக்குக் காரணமெனவும் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் அத்தியாவசிய செலவீனங்கள் மற்றும் கொரோனா தொற்றுநோயைக் கட்டுப்படுத்துவதற்காக முன்வைக்கப்பட்டுள்ள குறைநிரப்பு மதிப்பீடு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போது தொடர்ந்து உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் ,அரசாங்கத்தின் கணக்கு அறிக்கையில் கடன் தொகை 14.8 ட்ரில்லியன் ரூபாய் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், இதில் பல கோடி ரூபாய்கள் சேர்த்துக்கொள்ளப்படவில்லை என்றார்.

தீவிர சிகிச்சைப் பிரிவில் இருப்பவரைவிட மோசமான நிலையிலேயே அரசாங்கத்தின் தற்போதைய நிலைக் காணப்படுகிறது. கொரோனாவுக்கு முன்பே அரசாங்கத்தின் பாகங்கள் செயலிழந்து, நிமோனியா நிலைக்குச் சென்றுள்ளதாகவும் தெரிவித்தார்.

வற் வரி குறைப்பால் மாத்திரம் அரசாங்கத்துக்கு 30 ஆயிரம் கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளது. கடந்த அரசாங்கத்தின் காலத்தில் வரிகள் அதிகரிக்கப்பட்டிருந்தாலும், பொருள்களின் விலைகள் அதிகரிக்கவில்லை. ஆனால் தற்பாது பொருள்களின் விலைகள் பாரியளவில் அதிகரிக்கப்பட்டுள்ளது எனவும் கூறினார்.

கடந்த ஏப்ரல் மாதத்தில் மாத்திரம் 16 ஆயிரத்து 500 கோடி ரூபாய் நாணய நோட்டுக்களை அரசாங்கம் அச்சடித்துள்ளது. ஆனால் நாட்டின் பொருளாதாரத்தில் இது எந்தவிதமான முன்னேற்றங்களையும் ஏற்படுத்தவில்லை.

மனித உரிமைகள் மீறப்படுகின்றன ‘தமிழ் கைதிகளை விடுதலை செய்யுங்கள்’

ஜி.எஸ்.பி பிளஸுக்காக செய்யவில்லை

பா.நிரோஸ்

தற்போது சிறைச்சாலைகளிலுள்ள தமிழ் சிறைக் கைதிகளையும் முழுமையாக விரைந்து விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென தெரிவித்த இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர, வழக்குகளை தொடராது தமிழ் இளைஞர்கள் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருப்பது, மனித உரிமை மீறல் எனவும் தெரிவித்தார்.

நேற்றுப் பாராளுமன்றத்தில் தொடர்ந்து உரையாற்றிய இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் 12 ஆயிரம்பேருக்கு புனர்வாழ்வளிக்கப் பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

அதேபோல, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சிக் காலத்தில் அதிகளவான தமிழ் சிறைக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்றார்.

இதேபோல, தற்போதும் சிறைச்சாலைகளில் உள்ள தமிழ் சிறைக் கைதிகளை விடுதலை செய்யப்பட வேண்டும். ஜிஎஸ்பி பிளஸ் வரிச்சலுகையைப் பெற்றுக்கொள்வதற்காக நாம் இதனை கூறவில்லை. இவர்களில் பலர் வழக்குத் தாக்கல் செய்யப்படாது, தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இது மனித உரிமை மீறல் எனவும் தெரிவித்தார்.

‘அடிமைகளுடன் இருந்தால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது’

பா.நிரோஸ்

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா போன்ற அடிமைகளை அரசாங்கத்துடன் வைத்துக்கொண்டு ஒருபோதும் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாதெனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், தமிழர்களுக்கு எதிரான அரசாங்கத்தின்போக்கே நாட்டை சீனாவுக்கு விற்கும் நிலைக்குத் தள்ளியுள்ளது எனவும் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் அத்தியாவசிய செலவீனங்கள், கொரோனா தொற்று நோயைக் கட்டுப்படுத்து வதற்காக முன்வைக்கப்பட்டுள்ள குறைநிரப்பு மதிப்பீடு மீதான விவாதத்தில் நேற்றுக் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், கொரோனா வைரஸ் ஒழிப்புப் பணிகளில் அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது.

அரசாங்கத்தின் இனவாத சிந்தனையே கொரோனா ஒழிப்புப் பணிகளில் தோல்வி க்கு காரணம். தற்போது கொரோனா வைரஸ் சமூகப் பரவலாக மாறியுள்ளது. வடக்கு மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளில் மருத்துவ உபகரணங்கள் பற்றாக்குறைக் காணப்படுகிறது என்றார்.

வடக்கில் 250 வைத்தியர்களுக்கும் 1000 தாதியர்களுக்கும் 600 மருத்துவ தொண்டர்களுக்கும் பற்றாக்குறை நிலவுகிறது. சுதந்திரத்துக்குப் பின்னர் தமிழர்களை அழிப்பதற்கு, தமிழர் பகுதிகளில் குடியேற்றங்களை மேற்கொள்வதற்குமே ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் முயற்சித்தன என்றார்.

மலையக மக்களுக்குப் பிரச்சினை ‘ஆணையாளரும், பொலிஸாரும் கண்டுகொள்வதில்லை’

பா.நிரோஸ்

எல்லாப் பக்கங்களில் இருந்து மலையக மக்களுக்குப் பிரச்சினைகள் வந்தால், அந்த மக்கள் எவ்வாறு சமாளிப்பார்களென கேள்வி எழுப்பிய பாராளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணன், பெருந்தோட்டங்களில் என்ன வகையான நிர்வாகங்கள் நடக்கின்றன? தொழில் ஆணையாளரும், பொலிஸாரும் எதனையும் கண்டுகொள்வதில்லை எனவும் குற்றஞ்சுமத்தினார்.

அரசாங்கத்தின் அத்தியாவசிய செலவீனங்கள், கொரோனா தொற்று நோயைக் கட்டுப்படுத்துவதற்காக முன்வைக்கப்பட்டுள்ள குறைநிரப்பு மதிப்பீடு மீதான விவாதத்தில் நேற்றுக் கலந்துகொண்டு தொடர்ந்தும் உரையாற்றிய அவர், கொரோனா வைரஸ் நிலைமைகளால் மலையக மக்கள் பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ளது.

கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்கான திட்டங்கள் எதுவும் அரசாங்கத்திடம் இல்லை. இதனாலேயே தொற்று நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

தமிழ்மொழி அரச கரும மொழி; ‘பாராளுமன்றத்தில் பின்பற்றுவதில்லை’

அரசமைப்பில் தமிழ் அரச கரும மொழியாக குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், பாராளுமன்றத்தில் அதனை முறையாகப் பின்பற்றுவதில்லை எனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், பாராளுமன்றத்தில் தனது சிறப்புரிமை மீறப்படுவதாகவும் குற்றஞ்சுமத்தினார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (23) அமர்வில் கலந்துகொண்டு சிறப்புரிமை பிரச்சினையை முன்வைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், அரசியல் பழிவாங்கல் தொடர்பான அறிக்கையின் மொழி தெரிவு தொடர்பாக கதைக்கும் போது நான் ஆங்கிலத்தில் வழங்கலாமென கூறியிருந்தேன்.

எனினும் அந்த அறிக்கை சிங்கள மொழியிலேயே சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2,043 பக்கங்களைக் கொண்டதாக மூன்று தொகுதிகளில் இந்த அறிக்கை உள்ளது. அது தொடர்பான இறுவட்டும் (சீடி) கிடைத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

தமிழில் இந்த அறிக்கை வழங்கப்பட்டிருந்தாலும், சிங்கள மொழியில் உள்ள அறிக்கையின் சில பக்கங்களே தமிழல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன என்றார்.

கல்முனை கரையோர அபிவிருத்தியில்

‘தமிழ்ப் பிரதேசங்கள் முற்றாகப் புறக்கணிப்பு’

■ வி.ரி.சகாதேவராஜா

கல்முனை மாநகர கரையோர அபிவிருத்தித் திட்டத்தில் தமிழ்ப் பிரதேசங்கள் முற்றாகப் புறக்கணிப்பட்டு வருவதாக, கல்முனை மாநகர சபையின் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அது தொடர்பாக இடம்பெற்ற திட்டமிடல் கூட்டத்துக்கு தமிழ்ப் பிரதேச செயலாளர் மற்றும் மாநகர சபையின் தமிழ் உறுப்பினர்களுக்கு எவ்வித அழைப்புகளும் விடுக்கப்படாமல் கதவடைப்பு இடம்பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

“கல்முனை மாநகர அபிவிருத்தியில் இன ரீதியான பாகுபாடு தொடர்கிறது. கொரோனாவை விடக் கொடியவர்கள் இவர்கள்” எனவும் அவர் விசனம் தெரிவித்துள்ளார்.

அத்துடன், கல்முனை மாநகர சபை எல்லைக்குள் தமிழ்ப் பிரதேசங்கள் இல்லையா, தமிழர்கள் இல்லையா எனவும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

இது தொடர்பான உறுப்பினர் ராஜன் மேலும் தெரிவித்துள்ளதாவது, “கல்முனை மாநகர சபை என்பது தனியாக முஸ்லிம்களுக்கு மட்டுமானது அல்ல. கல்முனை மாநகர மேயரினதும் பாராளுமன்ற உறுப்பினர் ஹரிசினதும் செயற்பாடு, தமிழர்களைப் புறக்கணிப்பதாகவும் இனவாதமாக செயற்பட்டு, வங்குரோத்து அரசியல் செய்வதாகவுமே தொடர்கின்றது.

“தமிழர் பகுதிக்குள் உள்ள இஸ்லாமாபாத், கல்முனைக்குடி, மருதமுனை பகுதிகளில் கார்ப்பட் வீதிகள் போடப்பட்டுள்ளன. ஆனால், அருகிலுள்ள தமிழ்க் கிராமங்களுக்கு அது மறுக்கப்பட்டுள்ளது. இன்றும் யாரும் அதனை நேரடியாகக் காணலாம்.

“மாநகர சபைக்குட்பட்ட வாசிகசாலைகளில் மருதமுனையில் புனரமைப்பு நடக்கிறது. ஆனால், பாண்டிருப்பு, பெரியநீலாவணை, கல்முனை தமிழ்ப் பகுதிகளில் உள்ள நூலகங்கள் எவ்வித புனரமைப்போ அபிவிருத்தியோ இல்லாமல் காணப்படுகின்றன.

“இப்படிப்பட்ட தொடர் புறக்கணிப்பும் பாகுபாடுமே தமிழ் மக்கள் தனியான பிரதேச செயலகம் மற்றும் தனியான நகர சபை கோருவதற்குக் காரணம் என்பதை மறக்கக்கூடாது” எனத் தெரிவித்துள்ளார்.

மக்கள் ஒன்றுகூடுவதைத் தவிர்க்க

இளைஞர் குழு நியமனம்

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்

மன்னார் மாவட்டத்தில், பயணக் கட்டுப்பாடு தளர்த்தப்படும் காலப்பகுதியில், அதிகளவில் மக்கள் ஒன்றுகூடுவதை தவிர்க்கும் செயற்பாட்டை மேற்கொள்ளும் முகமாக, இளைஞர் குழுவொன்றை அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில், கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் முகமாக ஆராயும் அவசரக் கூட்டம், மன்னார் மாவட்டச் செயலகத்தில், மாவட்டச் செயலாளர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மேல் தலைமையில், நேற்று முன்தினம் (22) நடைபெற்றது. இதன்போதே. இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

மாவட்டத்தில், கடந்த சில தினங்களாக அதிகளவான கொரோனா

தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமை தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டது.

மேலும், மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்றவர்களிடமும் வெளி மாவட்டங்களில் இருந்து வருகை தந்தவர்கள் குறிப்பாக வெளிமாவட்டங்களில் ஆடைத் தொழிற்சாலையில் கடமையாற்றுகின்றவர்களிடமும் இருந்தே, அதிகளவான தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக குறித்த கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு மாற்று நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கான ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன.

மேலும், மாவட்டத்தில் பல்வேறு பிரச்சினைகளை தீர்க்கும் வகையில் இளைஞர்களைக் கொண்ட குழு ஒன்றை அமைத்து, அவர்களுக்கான பாதுகாப்பு உடைகளை வழங்கி, அவர்கள் மூலம், பயணக் கட்டுப்பாடு தளர்த்தப்படும் காலப்பகுதியில், அதிகளவில் மக்கள் ஒன்றுகூடுவதை தவிர்க்கும் செயற்பாட்டை மேற்கொள்ளுமாறும் ஆலோசனை வழங்கப்பட்டது.

இதையடுத்து, குறித்த செயற்பாட்டை உடனடியாக நடைமுறைக்கு கொண்டு வருவது என தீர்மானிக்கப்பட்டதுடன், இச்செயற்பாட்டுக்கு விரும்பிய, கட்டுக்கோப்புடன் சுகாதார நடைமுறைகளை மக்கள் மத்தியில் கொண்டு செல்லக்கூடிய இளைஞர், யுவதிகளை தன்னார்வத் தொண்டர்களாக இணைத்துக்கொள்ளவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

கொரோனா அறிகுறிகள் தென்பட்டால்

‘வீடுகளில் இருந்து சுய வைத்தியம் செய்யாதீர்’

■ எச்.எம்.எம்.பர்ஸான்

கொரோனா அறிகுறிகளுடன் வீடுகளில் இருந்து கொண்டு, சுய வைத்தியம் செய்யாமல், தங்களுடைய உயிர்களைப் பாதுகாக்க அனைவரும் முறையான சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ள முன்வரவேண்டும் என்று கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி எம்.எச்.எம்.தாரிக் தெரிவித்தார்.

தற்போதைய நிலைமையைக் கருத்திற்கொண்டு, பொதுமக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் எனவும் அவர்

வேண்டிக்கொண்டார்.

அத்தோடு, கொரோனா தொற்று அறிகுறிகள் தென்பட்டால், அச்சம் கொள்ளாமல், உடனடியாக வைத்தியசாலைகளுக்குச் சென்று பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் சுகாதார வைத்திய அதிகாரி வலியுறுத்தினார்.

மட்டக்களப்பிலும் திருகோணமலையிலும்

நேற்று மேலும் சில பகுதிகள் முடக்கம்

■ வா.கிருஸ்ணா, எம்.எஸ்.எம்.நூர்தீன், ஏ.எச்.ஏ. ஹுஸைன்

மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களின் சில பகுதிகள் நேற்று (23) காலை 6 மணிமுதல் தனிமைப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.

இதன்படி, மட்டக்களப்பு மாவட்டத்தில் 11 கிராம சேவையாளர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்படவுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்தார்.

காத்தான்குடி பிரிவு 4, காத்தான்குடி பிரிவு 5 தெற்கு, காத்தான்குடி பிரிவு 6 மேற்கு, புதிய காத்தான்குடி பிரிவு வடக்கு, தெற்கு, கிழக்கு ஆகிய கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அதேநேரம், காத்தான்குடி பொலிஸ் அதிகாரப்பிரிவுக்குட்பட்ட கர்பலா வீதி, ஏ.எல்.எஸ். மாவத்தை, நூரானியா பொது மயான வீதி, கடற்கரை வீதி என்பனவும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், திருகோணமலை மாவட்டத்தில், நாகராஜ வலவ்வ கிராம சேவகர் பிரிவு தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் காரணமாக கடந்த 6ஆம் திகதி தொடக்கம் முடக்கப்பட்டிருந்த ஏறாவூர் நகர பிரதேச செயலகப் பிரிவிலுள்ள ஏறாவூர் 02 கிராம சேவகர் பிரிவு விடுவிக்கப்பட்டுள்ளது.

பரிசில் வழங்கும் நிகழ்வு

யாழ். இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில், இணையவழி மூலம் நடத்தப்பட்ட யோகா போட்டிப் பரீட்சையில், கிளிநொச்சி மாவட்டத்தில் முதல் மூன்று நிலைகளில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு, நேற்று (23) கிளிநொச்சி வலயக் கல்வி பணிமனையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், யாழ். இந்திய துணைத்தூதுவர் சங்கர் பாலச்சந்திரன், வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இளங்கோவன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது, அக்கராயன் மகா வித்தியாலயத்துக்கு இந்திய துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் இசைக்கருவிகளும் வழங்கப்பட்டன.

மு.தமிழ்ச்செல்வன்

உப தபாலக இடமாற்றத்துக்கு எதிர்ப்பு

■ நடராஜா கிருஸ்ணகுமார்

முல்லைத்தீவு - மணவாளபட்டமுறிப்பு கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட கரிப்பட்டமுறிப்பு கிராமத்தில் இயங்கிய உப தபாலகம் இடமாற்றம் செய்யப்பட்டதற்கு, கிராம பொது அமைப்புகளும் பொதுமக்களும் கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

கடந்த 43 ஆண்டுகளாக, கரிப்பட்டமுறிப்பு கிராமத்தில் இயங்கிய உப தபாலகம், தற்போது தச்சடம்பன் கிராமத்துக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ள நிலையில், பொதுமக்களால் எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

குடியிருப்புக்குள் புகுந்த முதலை

வனஜீவராசி அதிகாரிகளால் மடக்கிப் பிடிப்பு

■ எம்.எஸ்.எம்.நூர்தீன், ரீ.எல்.ஜவ்பர்கான், ஏ.எச்.ஏ. ஹுஸைன்

மட்டக்களப்பு, மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தாழங்குடா - 03 சவேரியார்புரம், கல்முனை - மட்டக்களப்பு பிரதான வீதிக்கு அருகாமையிலுள்ள குடியிருப்புப் பகுதிகளுக்குள் நேற்று (23) காலை புகுந்த முதலையால் அங்கு பதற்றமான நிலைமை ஏற்பட்டது.

இது தொடர்பில் வன ஜீவராசிகள் திணைக்கள

அதிகாரிகளுக்கு பிரதேச மக்கள் அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து, அப்பகுதிக்குச் சென்று அதிகாரிகள் சுமார் 6 அடி நீளமான குறித்த முதலையை மீட்டு, உன்னிச்சை காட்டுப் பகுதியில் உள்ள குளத்தில் விடுவித்துள்ளனர்.

தனிநபர் முன்னெடுக்கும்

அரச காணி சுவீகரிப்புக்கு தேவபுர மக்கள் எதிர்ப்பு

■ ஆர்.ஜெயஸ்ரீராம்

மட்டக்களப்பு, கோறளைப்பற்று தெற்கு கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள தேவபுரத்தில் பிரதேச மக்கள், நேற்று (23) கவனயீர்ப்புப் போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

சுமார் 25 ஏக்கர் அரச காணியை தனிநபர் ஒருவர் சுவீகரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார் எனத் தெரிவித்து, அதனைத் தடுத்து நிறுத்துமாறும் கோரியே, இந்தப் போராட்டத்தை தேவபுர மக்கள் முன்னெடுத்தனர்.

மேற்படி காணிக்குள், நேற்றுக் காலை ஒன்று கூடிய மக்கள், கையில் சுலோகங்கள் எழுதிய பதாதைகளை கையில் ஏந்தியவாறும் கோஷங்கள் எழுப்பியவாறும் சமூக இடைவெளியைப் பேணி, தமது எதிர்ப்பை

வெளிப்படுத்தினர்கள்.

எவரும் அதனை உரிமை கோர முடியாது என்றும் தங்களுக்கு இவ்விடத்தில் காணி வழங்குமாறும் அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக கிரான் பிரதேச செயலாளர் கருத்துத் தெரிவிக்கையில்,

இக்காணி அனுமதிப் பத்திரங்கள், 2008ஆண்டு 12 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. எனவே, இந்தக் காணியில் பொதுமக்கள் சுவீகரிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதைத் தவீர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.

மனைவியல்ல; சகோதரியே கதறியழுதார்

மட்டக்களப்பில் துப்பாக்கிப் பிரயோகத்தில் பலியான, மணல் லொறி சாரதியான மகாலிங்கம் பாலசுந்தரத்தின் மனைவியே கதறியழுததாக தெரிவிக்கப்பட்டு, ‘மண் காசு தானே வாங்கப் போனவர்’ என்ற தலைப்பில் எமது நேற்றைய (23) மின்னிதழில் செய்தி பிரசுரமானது. அவ்வாறு கதறியழுதவர் மனைவி அல்ல என்பதுடன், மரணமடைந்தவரின் மூத்த சகோதரியாவார் என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம். இந்த தவறால் ஏற்பட்ட அசௌகரியங்களுக்காக வருந்துகின்றோம். (ஆர்)

பொலிஸ் காவலரண்கள்

பொலிஸ் நிலையங்களாக மாற்றம்

■ க.அகரன்

வவுனியா- சிதம்பரபுரம், நெளுக்குளம் ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள 2 பொலிஸ் காவலரண்களும் பொலிஸ் நிலையங்களாக தரமுயர்த்தப்பட்டு, நேற்று (23) மக்கள் பாவனைக்காக திறந்துவைக்கப்பட்டன.

வடமாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரத்ன, இந்தப் புதிய பொஸ் நிலையங்களைத் திறந்தவைத்தார்.

இதன்போது, வறுமைக்கோட்டுக்குட்பட்ட 20

குடும்பங்களுக்கு பொலிஸாரால் நிவாரண உதவிப்பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன், மாற்றுவலுவுடைய சிறுவன் ஒருவருக்கு சக்கரகதிரையும் வழங்கிவைக்கப்பட்டது.

பொதுமக்கள் முறைப்பாடுகள் வழங்கும் செயல்முறையை இலகுவாக்குவதற்காக, நாடு முழுவதும் 197 புதிய பொலிஸ் நிலையங்கள் அமைக்கப்படுமென்று, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியல் அட்மிரல் சரத் வீரசேகர் தெரிவித்திருந்தார்.

இதற்கமைவாக, வவுனியாவில் சிதம்பரபுரம், நெளுக்குளம் ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள 2 பொலிஸ் காவலரண்களையும், இவ்வாறு புதிய பொலிஸ் நிலையங்களாக தரமுயர்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நியமனம் கோரி

சுகாதாரத் தொண்டர்கள் ஆர்ப்பாட்டம்

■ க.அகரன்

தகைமை பாராது சேவைக் கால அடிப்படையில், நியமனம் வழங்குமாறு கோரி, சுகாதாரத் தொண்டர்களால், வவுனியா பிரதேச செயலகத்துக்கு முன்னால், நேற்று (23) காலை 9.30 மணிக்கு ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கருத்துரைத்த ஆர்ப்பாட்டக்காரர்கள், 2017, 2018ஆம் ஆண்டுகளில், நியமனம் கோரி 120 நாள்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டதன் விளைவாக, 2019.05.27, 2019.09.29 அன்று நேர்முக தேர்வு நடத்தப்பட்டு வழங்கப்பட்ட நியமனங்கள் இடைநிறுத்தப்பட்டன என்றனர்.

தற்போது எமது நியமனங்களில் கவனம் செலுத்தாது, 1 இலட்சம் வேலைவாய்ப்பினூடாக எமது சுகாதாரத் தொண்டர் பட்டியலில் இருந்து சேவைக்காலம் குறைந்தவர்களையும் சுகாதாரத் தொண்டராக கடமையாற்றாதவர்களையும் தேர்ந்தெடுத்து, வவுனியா பிரதேச செயலகத்தில், அவர்களுக்கான நேர்முகத்தேர்வு, நேற்று (23) நடைபெறுகின்றது.

குறித்த நேர்முகத்தேர்வை நிறுத்தி, நியாயமான முறையில், தொண்டராக சேவையாற்றிய அனைத்து சுகாதார தொண்டர்களுக்கும் சேவைகால அடிப்படையில் தகைமைபாராது நியமனங்கள் வழங்குவதற்கு ஆவண செய்து தருமாறு வேண்டி நிற்கின்றோம் என்றனர்.

இதேவேளை, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், வவுனியா பிரதேச செயலாளரிடம் மகஜரொன்றைக் கையளித்ததுடன், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு வழங்குவதற்கான

மகஜரொன்றையும் பிரதேச செயலாளரிடம் கையளித்தனர்.

இதன்போது, மகஜரைப் பெற்றுக்கொண்ட பிரதேச செயலாளர், வடமாகாண பிரதம செயலாளரால் வழங்கப்பட்ட பட்டியலுக்கமையவே, குறித்த 28 பேருக்கும் நேர்முகத்தேர்வுகள் இடம்பெறுகின்றன என்றார்.

ஏனையவர்களின் பட்டியல், எதிர்காலத்தில் கிடைக்கும் பட்சத்தில், நேர்முகத்தேர்வுகளை நடத்துவோம் என்று, ஆர்ப்பாட்டகாரர்களிடம் தெரிவித்தார்.

பொருள் கொள்வனவுக்காக

பலாங்கொடையில் குவிந்த மக்கள்

■ க.மஹிந்தகுமார்

நாடு முழுவதும் கொரோனா தொற்றால் அமல்படுத்தப்பட்டு, 21ஆம் திகதி தளர்த்தப்பட்ட பயணக் கட்டுபாடுகள், நேற்று (23) இரவு 10 மணி முதல் மீண்டும் அமல்படுத்தப்பட்டதால், பொருள் கொள்வனவுக்காக அதிகளவான மக்கள், பலாங்கொடை நகருக்கு நேற்று (23) வருகைத் தந்தனர்.

இதனால் நகரில் ஓரளவு சன நெரிசல் காணப்பட்டதுடன், அதிகளவான மக்கள் நகை அடவு பிடிக்கும் இடங்கள் மற்றும் மதுபான நிலையங்களுக்கு அருகில் கூடியமை குறிப்பிடத்தக்கது.

> **அதிகளவான மக்கள், நகை அடவு பிடிக்கும் இடங்கள் மற்றும் மதுபான நிலையங்களுக்கு அருகில் கூடியமை குறிப்பிடத்தக்கது**

களஉத்தியோகத்தர்கள் மீது

தொடரும் தாக்குதல்கள்

பணிப் பகிஷ்கரிப்பில் தங்கக்கலை களஉத்தியோகத்தர்கள்

மலையகத்தில் அண்மைக் காலமாக தோட்ட களஉத்தியோகத்தர்கள் மீது தொழிலாளர்கள் தாக்குதல் நடத்தப்படுவதும், அதற்கு எதிராக தோட்ட நிர்வாகம் தொழிலாளர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுத்தல், தொழிலாளர்கள் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடுதல் போன்ற செயற்பாடுகள் பரவலாக அதிகரித்து வருகின்றன.

இந்த நிலையில், லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தங்கக்கலை தோட்ட களஉத்தியோகத்தர்கள் மூவர் மீது, குறித்த தோட்டத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் தாக்குதலை மேற்கொண்டதையடுத்து, அவ் அதிகாரிகள் மூவரும் லிந்துலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன்,

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய நபரை கைதுசெய்யக் கோரி, தங்கக்கலை தோட்ட களஉத்தியோகத்தர்கள், நேற்று (23) பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

தாக்குதலை மேற்கொண்ட நபர், மரமொன்றை வெட்டியதாகவும், இதற்கு தோட்ட நிர்வாகம் சார்பில் களஉத்தியோகத்தர்கள் மூவரும் எதிர்ப்புத் தெரிவித்த போதே, தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர்.

இதேவேளை, தாக்குதலை நடத்திய நபர், தோட்டத்தில் பணிபுரிபவர் அல்ல என்றும் தெரிவித்துள்ள நிர்வாகம் இவருக்கு எதிராக, லிந்துலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டும் இதுவரை சந்தேகநபரை கைதுசெய்யவில்லை எனத் தெரிவித்தனர்.

எனவே, சந்தேகநபரைக் கைதுசெய்யும் வரை, பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளதாக தெரிவித்த களஉத்தியோகத்தர்கள், தங்கக்கலை தோட்டத்தின் 4 பிரிவுகளைச் சேர்ந்த 22 உத்தியோகத்தர்களுடன் 630 தொழிலாளர்களும் தமது பணிப் பகிஷ்கரிப்புக்கு ஆதரவு தெரிவித்து களத்தில் குதித்துள்ளனர் என்றனர்.

மரணித்த சிறுவனின் உடலை கொண்டு செல்லாத

'மனிதநேயமற்ற போக்கு'

தோட்ட நிர்வாகத்துக்கு கண்டனம்

■ பீ.கேதீஸ்

பூண்டுலோயா சீன் பழைய தோட்ட கீழ்பிரிவு தோட்ட நிர்வாகத்தின் மனித நேயமில்லாப் போக்கைக் கண்டிப்பதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் கொத்மலை பிரதேச சபை உறுப்பினர் இராமையா பாரதிராஜா தெரிவித்துள்ளார்.

பூண்டுலோயா சீன் பழைய தோட்ட கீழ்பிரிவு தோட்டத்தில் சுகவீனம் காரணமாக, நேற்று முன்தினம் (22) வீட்டிலேயே உயிரிழந்த 7 வயது விசேட தேவையுடைய சிறுவனின் உடலை பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ள நுவரெலியா ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல வேண்டும் என அப்பகுதி பொது சுகாதார அதிகாரி, சுகாதார வைத்திய அதிகாரி ஆகியோரால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

ஆனால், சிறுவனின் உடலைக் கொண்டுசெல்வதற்கு அத்தோட்ட நிர்வாகத்தால் வாகனம் வழங்க மறுப்புத் தெரிவிக்கப்பட்டது. அதன்பின்னர் அத்தோட்டத்தில் ஓட்டோ வைத்திருக்கும் இளைஞர் ஒருவர் முன்வந்து, சிறுவனின் உடலை தனது ஓட்டோவில் ஏற்றி நுவரெலியா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளார்.

எனவே, தோட்ட நிர்வாகத்தின் இந்த மனிதநேயமற்ற போக்கைக் கண்டிப்பதாக பிரதேச சபை உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

தற்போது நாட்டில் நிலவும் கொவிட் -19 பெருந்தொற்றின் காரணமாக, இவ்வாறான நிலைமைகள் காணப்படுகின்றன. எனவே, இதற்கு அரசாங்கமும் நடவடிக்கை எடுக்க வேண்டும். பெருந்தோட்டப் பகுதிகளில் அதிகளவான தொற்றாளர்கள் இனங்காணப்பட்டு வருகின்ற நிலையில், அம்பூலன்ஸ் மற்றும் ஏனைய வசதிகளையும் அரசாங்கம் முன்கூட்டியே ஏற்படுத்திக் கொடுக்க முன் வரவேண்டுமெனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

வனராஜா விபத்தில் ஓட்டுநர் காயம்

■ எஸ்.கதீஸ்

ஹட்டன் - பொகவந்தலாவை பிரதான வீதியின் வனராஜா பகுதியில், ஓட்டோவும் மோட்டார் சைக்கிளும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர், படுங்காயமடைந்து, கிளங்கன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று (23) பகல் இடம்பெற்றுள்ள இந்த விபத்தில், காசல்ரீ பகுதியில் இருந்தும் வனராஜாவிலிருந்தும் ஹட்டனுக்குச் சென்ற வாகனங்களே

விபத்துக்குள்ளாகியுள்ளன. விபத்துத் தொடர்பில், ஹட்டன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

ஆதரவாளர்கள் ஆரவாரம்...

ஐக்கிய தேசிய கட்சியின் தேசிய பட்டியல் உறுப்பிரானராக நேற்று (23) பாராளுமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆதரவாளர்கள், ஹட்டன் நகர மத்தியில் பட்டாசு கொளுத்தி மகிழ்ச்சியை வெளிக்காட்டினர். (ரஞ்சித் ராஜபக்ஸ)

முறையாக அகற்றப்படாத கழிவுகள்;

நோய்கள் ஏற்படும் அபாயம்

■ ஷான்

மாத்தளை மாநகர சபைக்குட்பட்ட களுதாவளை, 1ஆம், 2ஆம் வட்டாரம், மரக்கூட்டுத்தாபன வீதிகளில் சேரும் கழிவுகள் மாநகர சபையால் முறையாக அகற்றப்படுவதில்லை என மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இதனால் மழைக்காலங்களில் கழிவுகளில் மழைநீர் தேங்கி, சுற்றாடலுக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்படுவதுடன் நுளம்பு, ஈக்களால் நோய்கள் ஏற்படும் அபாயம் உள்ளதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

மாநகர சபையின் கழிவு அகற்றும் பணியாளர்கள், நகர்ப் புறங்களில் மாத்திரம் சுத்திகரிப்பை செய்வதுடன், குறிப்பிட்ட சில பகுதிகளில் சுத்திகரிப்பு

நடவடிக்கையில் ஈடுபடுவதில்லை என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, இந்த விடயம் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என்றும் இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

வீடுகளுக்கு அருகிலேயே

சி.சி.டி.வி கமெராவில் சிக்கும் சிறுத்தைகள்

பீதியில் காமினிபுர மக்கள்

■ ரஞ்சித் ராஜபக்ஸ

ஹட்டன், சிங்கமலை வனத்தில் உள்ள சிறுத்தைகள், ஹட்டன் நகரின் காமினிபுர பகுதிகளிலுள்ள வீடுகளுக்கு அருகில் இரவில் வந்து செல்கின்றமை வீடுகளில் பொருத்தப்பட்டுள்ள சி.சி.டி.வி கமெராக்களில் பதிவாகியுள்ளன.

காமினிபுர பகுதியானது சிங்கராஜ வனத்துக்கு அருகில் இருப்பதால், வீடுகளில் வளர்க்கப்படும் நாய்கள், கால்நடைகளை வேட்டையாடுவதற்கு இவ்வாறு சிறுத்தைகள்

வீடுகளுக்கு வருவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு வரும் சிறுத்தைகள், வீட்டு வாசல்களுக்கே வந்து செல்கின்றமையும் சி.சி.டி.வி கமெராக்களில் பதிவாகியுள்ளன. இதனால் தாம் மிகுந்த அச்சத்தில் இருப்பதாக, காமினிபுர மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த சில நாள்களாக காமினிபுர பிரதேசத்தில் உள்ள நாய்கள் பல காணாமல் போயுள்ளதாகவும், எனவே, இவ்வாறு குடியிருப்புகளுக்கு அருகில் வரும் சிறுத்தைகளைப் பிடித்து, வனங்களில் விட வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் காமினிபுர பிரதேசவாசிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

குழு மோதல்; நால்வர் காயம்

■ ஏ.ஏ.எம்.பாயிஸ்

கலவான தேர்தல் தொகுதியின் றம்புக கிராம உத்தியோகத்தர் பிரிவில் இரு குழுக்களிடையே இடம்பெற்ற மோதலில் நால்வர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் (22) இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில், கலவான பிரதேச சபையின் உறுப்பினரும் அவரது மகனும் பொலிஸாரால் தேடப்பட்டு வருகின்றனர்.

குறித்த இருவரையும் சார்ந்த குழுவொன்றே மற்றொரு குழு மீது தாக்குதல் நடத்தியுள்ளதாகவும், தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்து இறக்குவானை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் இருவரையும் குறித்த குழுவினர் அச்சுறுத்தி விட்டு சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தடுப்பூசி செலுத்த மக்கள் ஆர்வம்

■ ஆ.புஷியரசன்

பதுளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிளன்- அல்பின், ரம்புக்பொத்த ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலுள்ள 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு, ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக நூலகக் கட்டட வளாகத்தில் நேற்று (23) தடுப்பூசி செலுத்தப்பட்டது.

இதன்போது, இங்குருகமுவ, பலகல்ல, செல்வகந்த, வேவெஸ்ஸ , அசேலபுர ஆகிய

தோட்டங்களைச் சேர்ந்த பெருமளவான மக்கள் தடுப்பூசி செலுத்த ஆர்வத்துடன் வருகை தந்தனர்.

எரிபொருள் விலையேற்றத்துக்கு எதிராக

கட்டுகஸ்தோட்டையிலும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

■ மொஹமட் ஆஷிக்

எரிபொருளின் விலை மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிப்புக்கு எதிராக நாட்டின் பல்வேறு இடங்களில் நேற்றும் (23) ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இதற்கமைய, ஹரிஸ்பத்துவ பிரதேச சபையின் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களால், கட்டுகஸ்தோட்டை நகரிலும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் அக்குறணை, பூஜாப்பிட்டிய பிரதேச சபை உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

புதிய அதிபர்கள் நியமனம்

■ ஏ.ஏ.எம்.பாயிஸ்

கல்வி அமைச்சின் செயலாளரின் சிபாரிசுக்கு இணங்க அரச சேவைகள் ஆணைக்குழுவால் பாடசாலை அதிபர்களுக்கான நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதற்கமைய, பலாங்கொடை இ/ ஜெய்லானி தேசிய பாடசாலை அதிபராக எம்.ஜே.எம்.மன்சூர், குருநாகல் கு/ கெகுணுகல்ல தேசிய பாடசாலை அதிபராக ஏ.எம்.எம் றிசாத் ஆகியோர் நியமனம் பெற்றுள்ளனர்.

இருட்டு அறைக்குள் கறுப்புப் பூனைகளைத் தேடும் காண்டம்

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஒன்பதாவது தடவையாக, நேற்று (23) சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

எம்.பியானதன் பின்னர் அவர் ஆற்றிய முதலாவது உரை, ஆக்கபூர்வமானதாகவும் தீர்க்கத்தரிசனத்துடனான ஆலோசனைகளை அரசாங்கத்துக்கு வழங்குவதாகவும் அமைந்திருந்தது. நாட்டின் பொருளாதார பின்னடைவைச் சரிசெய்து கொள்வதற்கு, சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து உதவி பெறுவதே, ஒரேயொரு வழிமுறையாகும் என்றார்.

ஆனால், ரணிலின் யோசனையை ஏற்றுக்கொள்ளும் எண்ணம் அணுவளவு கூட, அரசாங்கத்துக்குக் கிடையாது. அரசாங்கம் முழுமையாக சீனாவிடம் சரணாகதி அடைந்துள்ள நிலையில், சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து உதவியைப் பெற்றுக்கொள்ளப் போவதில்லை. அவ்வாறு பெறினும் நாணய நிதியத்தின் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதற்கு சீனா, இந்த அரசாங்கத்தை அனுமதிக்கப்போவதும் இல்லை.

ஏனென்றால், இலங்கையில் கொரோனாவின் முதலாவது அலை 2020இல் பரவிய போது, சர்வதேச நாணய நிதியத்திலிருந்து இலங்கை, கொரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்காக உதவி கோரியிருந்தது. ஆனால், அதை சர்வதேச நாணயநிதியம் வழங்கியிருக்கவில்லை. இதன்போது, இலங்கை- சீனாவுக்கு இடையிலான உறவு தொடர்பாக, சர்வதேச நாணய நிதியம் விடுத்திருந்த அறிக்கை குறித்து, இலங்கை அரசாங்கம் தனது அதிருப்தியையும் வெளிப்படுத்தியிருந்தது.

உலக நாடுகள் நிதி நெருக்கடியில் தவிக்கும் போது அதற்குக் கைகொடுத்து உறுதுணையாக இருப்பது சர்வதேச நாணய நிதியத்தின் நோக்கங்களில் முக்கியமானதாகும். அந்நிதியத்தில், 1950ஆம் ஆண்டு முதல் உறுப்பினராக இருக்கும் இலங்கை, ஏறக்குறைய வருடம் தவறாது அதனிடமிருந்து நிதியுதவியை பெற்றுக்கொண்டுள்ளது. அதனால் முன்வைக்கப்படும் நிபந்தனைகளை முன்னைய அரசாங்கங்கள் ஏற்று, நடைமுறைப்படுத்தியும் இருந்தன.

ஆனால், இந்த நிபந்தனைகள் பெரும்பாலும் பேசுபொருளாக இருந்ததில்லை. குறிப்பாக, சீனாவுக்கு நாட்டின் இறைமையைக் கையளித்துவிட்டதாகக் குற்றஞ்சாட்டும் அளவுக்கு, இருந்ததில்லை.

புத்திஜீவிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறந்த அறிவாளி ரணில், தேசிய, சர்வதேச பொருளாதாரம், சர்வதேச அரசியல் பற்றிய விடயங்களில், இன்றுள்ள அரசியல்வாதிகளைவிட ஆழமான அறிவுமிக்கவர்.

விடுதலைப் புலிகளை ராஜபக்ஷர்கள் தான், போரில் தோற்கடித்தார்கள் என்று பாமர மக்கள் என்னதான் நம்பிக்கொண்டிருந்தாலும், ரணிலின் அரசியல் சாணக்கியங்கள் நிறைந்த தந்திரமான காய்நகர்த்தல்களே, புலிகளின் தோல்விக்குக் காரணம் என, அரசியல் ஆய்வாளர்கள் நம்புகின்றார்கள். அதில் உண்மை இல்லாமலில்லை.

தற்போது நாட்டில் இராணுவ அதிகாரத்துக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இலங்கை இராணுமயமாகி வருகின்றது என்ற எச்சரிக்கை புறந்தள்ளக்கூடியதல்ல.

ரணிலின் யோசனையை அரசாங்கம் பரிசீலிக்கப் போவதில்லை என்பது எவ்வளவு உண்மையோ, அதேயளவு உண்மை, அரசாங்கம் பயணிக்கும் பாதை தவறானது; அது செய்வது என்னதென்று தெரியாமல் இருட்டு அறைக்குள் கறுப்புப் பூனைகளைத் தேடிக்கொண்டிருப்பதும் ஆகும். இதனால் மக்களுக்கும் விடிவில்லை; நாட்டுக்கும் முன்னேற்றமில்லை என்பதே நிஜம்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk

வாழ்வியல் தரிசனம்

அறியாமை என்பது மிகவும் பாரதூரமானது. அறியாமையில் புகுந்து கொள்ளும்போது, வாழ்க்கையில் அழகும் வதனமும் மறைந்து போகின்றன. நல்லதும் சிறப்பானதுமான சிந்தனைகளைச் சிரசில் ஏற்றாமல், தன்னறிவும் கிரகித்தல் அறிவும் இன்றி வாழ்ந்தால், புறக்கணிக்கக் கூடாத நற்பயன்கள், பெறுபேறுகளை இழந்துபோவதை அறியாமல் வாழவேண்டி வரும். இது ஒரு துர்ப்பாக்கிய நிலை. எந்த ஒரு விடயத்தையும் அங்கிகரிக்க முன்னர், அதைப் பகுத்தறிந்து, சிந்தனைக்குள் புகுத்திக் கொள்ளவேண்டும்.

சின்னக் குழந்தைகள் கூட கேள்விகளைக் கேட்டு, எங்களைத் திக்குமுக்காடச் செய்கிறார்கள். அவர்களது சந்தேகங்களுக்கு முழுமையாக விடையறிய முடியா விட்டாலும், அதை அப்படியே விட்டுவிடுவதும் இல்லை. சில சமயங்களில், அவர்களின் கேள்விகளால் நாங்களும் ஆச்சரியப்படுகின்றோம்.

தெரியாத விடயங்களுக்குள் அமிழ்ந்து போதலாகாது. தெரியாத விடங்களில் முடிவு எடுப்பதும் முட்டாள் தனம். சிறந்த முறையில் பாதை அமைந்தால், ஆன்மாவும் களிப்படையும்.

ஆன்மாவும் கருமங்களும் ஒன்றுக்கொன்று இயைபுபட வேண்டும். சரியான விடயங்களால் தேகம் களிப்படைகின்றது. இதனால், விழிப்புநிலை தானாக மலரும். விருப்பத்துடன் செய்க; அதைச் சரியாகச் செய்க!

–பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

மூடவும் முடியாது; திறக்கவும் இயலாது

ஷேக்ராஜா

எப்பொழுதுமே, ஒரு பாதையில் பயணித்துக் கொண்டிருப்போர், தாம் செல்கின்ற வழித்தடம் தவறானது எனத் தெரிய வரும்போது, உடனடியாக அந்த இடத்திலேயே வாகனத்தைத் திருப்பிக் கொண்டு, சரியான பாதையில் பயணிக்க எத்தனிப்பார்கள்; இதுதான் உலக வழக்கமாகும்.

கொவிட்-19 பெருந்தொற்றுக் காரணமாக, ஏற்பட்ட மரணங்கள் தொடர்பான தவறான தரவுகளின் அடிப்படையிலேயே கடந்த 14ஆம் திகதிக்குப் பின்னர், பயணத்தடையை நீடிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டதாக அரசாங்கம் கடந்த வாரம் அறிவித்திருந்தது. அதாவது, அந்தப் பாதையில் இன்னும் கொஞ்சத் தூரம் சென்றுவிட்டுத் திரும்பியுள்ளது.

ஆனால், உடனடியாகப் பயணத்தடையைத் தளர்த்தவில்லை. ஏற்கெனவே திட்டமிட்டதன் பிரகாரம், 21ஆம் திகதியே திறக்கப்பட்டது. அத்துடன், மீண்டும் 23ஆம் திகதி இரவு முதல் 25 அதிகாலை வரை பயணத்தடை அமுல்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலைமை தொடருமா, இத்துடன் முடிவுக்கு வருமா என்பது சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளுக்கே தெரியாது.

உண்மையான நிலைவரம் என்னவென்றால், நாட்டை மூடவும் முடியாத, திறக்கவும் முடியாத பெரும் இக்கட்டான நிலைக்குள் அரசாங்கம் தள்ளப்பட்டுள்ளது என்பதாகும். மூடிவைத்தால் பொருளாதாரப் பிரச்சினை; திறந்து விட்டால் வைரஸ் பிரச்சினை என்ற சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது.

பயணத்தடை முடிவுக்கு வந்து, திங்கட்கிழமை (21) தற்காலிகமாக நாடு வழமைக்குத் திரும்பிய போது, வீதிகளில் மக்கள் கூட்டம் கிட்டத்தட்ட நிரம்பி வழிந்தது. மதுக்கடைகளின் முன்னாலும் அடகுக் கடைகளுக்கு முன்னாலும் நீண்ட வரிசைகள் காணப்பட்டன.

இவற்றுள் நகை அடகுக் கடைகளின் முன்னால் காணப்பட்ட வரிசைகள், கொரோனாவும் பயணத் தடையும் நாட்டு மக்களின் வாழ்வில் எத்தனை பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது என்பதையும், அரச நிவாரணங்கள் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதற்கும் ஒரு பதச்சோறாக அமைந்தது எனலாம்.

புதுப்புது திரிபுகளுடன் தொடர்ச்சியாகப் பரவிக் கொண்டிருக்கும் கொரோனா வைரஸ், இன்னும் சில காலத்தில் ஏதாவது அடிப்படையில் கட்டுப்பாட்டுக்குள் வரும் என நம்பலாம். ஆனால், அது ஏற்படுத்திய சமூக, பொருளாதார விளைவுகளை, இலங்கை மக்கள் நீண்டகாலத்துக்கு முகம் கொடுக்க வேண்டிவரும் என்ற அச்சம் தோன்றியுள்ளது.

உலகின் பல நாடுகள், கொரோனா வைரஸ் காரணமாகத் திண்டாடிய நிலையில், இலங்கை முதலாவது அலையை, வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தியது. இரண்டாவது அலையிலும் இந்நிலைமை நீடித்தது. ஆனால், சுகாதார தரப்பினரின் அறிவுரைகளைக் காலம் தாழ்த்தி, கருத்திற் கொள்ளப்பட்டமை, உருமாறிய வைரஸ்களின் தீவிர பரவல் போன்றவற்றின் காரணமாக, மூன்றாவது அலையின் தாக்கம் மிக மோசமாக உள்ளது.

இந்நிலையில், மூன்றாம் அலையைக் கட்டுப்படுத்த, அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் வெற்றியளிக்கவில்லை என்று கூறி விட முடியாது. ஆனால், எதிர்பார்த்த வெற்றியைப் பெற்றுத் தரவில்லை என்றே கருத வேண்டியுள்ளது.

ஏப்ரல் விடுமுறைக்குப் பின்னரே, கட்டுப்பாடுகளை அமல்படுத்தியமை, அரசியல் தீர்மானங்கள் தாமதமடைந்தமை, புதிய ரக வைரஸ்களின் வீரியத்தன்மை, தடுப்பூசிகளைப் பெறுவதில் ஏற்பட்ட தாமதங்கள் உள்ளடங்கலாகப் பாதகமான அரசியல் சூழமைவுகளும் இதற்குக் காரணங்கள் ஆகும்.

நாட்டில் பெரும் குழப்பங்களும் நெருக்கடிகளும் ஒருசேர நிகழ்ந்து கொண்டிருக்கின்ற ஒரு காலப்பகுதியாக தற்காலத்தைக் குறிப்பிடலாம். கொரோனா நெருக்கடிக்கு புறம்பாக, பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன.

'எக்ஸ்பிரஸ் பேர்ள்' கப்பல் தீப்பிடித்து மூழ்கியதன் விளைவாக சுற்றாடல் பாதிப்பு மட்டுமன்றி, மீன்பிடி, சுற்றுலாத்துறையும் பாதிக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து மீள்வதற்கு பல வருடங்கள் செல்லும் என்று துறைசார்ந்தவர்கள் எச்சரித்து வருகின்றனர். இந்நிலையிலேயே அரசியல் குழப்பங்களும் தலைதூக்கியுள்ளதைக் காணலாம்.

ஆளும் பொதுஜனப் பெரமுன கட்சிக்குள்ளும், எதிர்க்கட்சிக்குள்ளும் சமகாலத்தில் பாரிய உட்பூசல்கள் வெளிக்கிளம்பி உள்ளன. ஆளும்கட்சியும் எதிர்க்கட்சியும் பலமாக இருக்க வேண்டிய ஓர் இக்கட்டான காலத்தில், இரு தரப்பும் இன்று பலமிழந்து, கட்டுக்கோப்பு இழந்து நிற்கின்றன.

இந்திய, இலங்கை அதிகாரப் போட்டியின் மையப் புள்ளியாக இலங்கை மாறியுள்ளது. இந்நிலையில், கப்பல் தீப்பிடித்ததும், ஆளும் தரப்பிலும் எதிர்த்தரப்பிலும் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளமையும் மிகப் பாதகமான ஒரு களநிலைமையை தோற்றுவித்திருக்கின்றது.

முதலாம், இரண்டாம் அலைகள் ஏற்பட்ட காலத்தில், அரசாங்கத்தினதும் ஏனைய தரப்பினரதும் கவனம் முழுமையாக கொவிட்-19 பெருந்தொற்றைக் கட்டுப்படுத்துவதிலேயே குவிக்கப்பட்டிருந்தது. ஆனால், இப்போது ஏற்பட்டுள்ள பலவிதமான பொருளாதார, சூழலியல் குழப்பங்கள், கொரோனவின் மூன்றாம் அலையைக் கட்டுப்படுத்துவதற்கான வினைதிறனான முன்னெடுப்புகளில் மறைமுகமான நேர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

மூன்றாவது அலையை கட்டுப்படுத்துவதற்காக, அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்தாலும் கூட, அவற்றின் காரணமாக வைரஸ் பரவலை ஓரளவுக்கு கட்டுப்படுத்த முடிந்ததே தவிர, முற்றாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர இயலவில்லை.

நாளாந்தம் வெளியாகின்ற மரணங்களின் எண்ணிக்கை, தவறாக அறிக்கையிடப்படலாம் அல்லது ஒரு நாளில் இடம்பெற்ற மரணம் இன்னுமொரு நாளின் தரவுகளில் உட்சேர்க்கப்படலாம். ஆயினும், மரணங்களின் மொத்த எண்ணிக்கை தினமும் அதிகரித்துக் கொண்டுதான் போகின்றது.

மரணங்கள் தொடர்பாக உண்மையான தரவுகள் வெளியிடப்படுவதில்லை என்றும், சரியாக அவை பகுப்பாய்வு செய்யப்படுவதில்லை என்றும் மறுபுறத்தில் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.

முழுமையான முடக்கமொன்றை சுகாதார துறையினர் வலியுறுத்தி நின்ற வேளையில், இம்முறை அரசாங்கம் பயணத்தடையை அமல்படுத்தியது. அதற்காகப் பல விதிமுறைகள் அறிவிக்கப்பட்டாலும், பொதுமக்களில் சிலர் அவற்றைப் பெரிதாக அசட்டை செய்யவில்லை.

பயணத்தடை விதிக்கப்பட்டிருந்த நாள்களில் கிராமப் புறங்களின் குறுக்கு வீதிகளில் மட்டுமன்றி, கொழும்பின் முக்கிய வீதிகளிலும் வாகனங்கள் நிரம்பி வழிந்தன. கணிசமானோர் நியாயமான காரணங்களுக்காக வெளியில் சென்றனர் என்பதை மறுப்பதற்கில்லை.

ஆனால், போலி வைத்தியர்கள், போலி அத்தியாவசிய சேவைக்காரர்கள் என ஒரு பிரிவினர் பயணத்தடையை மீறி நடந்தனர். அரசியல்வாதிகள், அதிகாரம் படைத்தோர், பெரும்புள்ளிகள், செல்வாக்குள்ளோரையும் இந்தப் பயணத்தடை கட்டுப்படுத்தவில்லை என்பதே நிதர்சனமாகும். இவ்விடயம் ஜனாதிபதியின் கவனத்தையும் ஈர்த்ததாக செல்லப்படுகின்றது.

ஆக மொத்தத்தில், நாள்கூலி செய்வோர், ஆட்டோ ஓட்டுநர்கள், அன்றாடம்காய்ச்சிகள், சிறிய கடை வைத்திருப்போர், நடைபாதை வியாபாரிகள், நாட்டாமைகள் எனத் தினசரி உழைப்பில் வாழ்வோர்தான் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால், ஏழைகளின் தொகை சமூகத்தில் இப்போது அதிகரித்துள்ளது. பயணத்தடை நீக்கப்பட்ட தினம், நகை அடகுக் கடைகளில் காத்துநின்ற மக்களின் நீண்ட வரிசையானது, கீழ்நடுத்தர, கீழ்மட்ட மக்கள் படும்பாட்டை குறிப்புணர்த்துவதாக இருந்தது.

இந்நிலையிலேயே, சுகாதாரத் தரப்பினரின் அறிவுறுத்தல்களையும் மீறி, மூன்று தினங்களாகப் பயணத்தடையைத் தளர்த்திய அரசாங்கம், இன்று வியாழக்கிழமை மீண்டும் அதனை அமல்படுத்தியுள்ளது. இந்தத் தடை நீடிக்குமா முடிவுக்கு வருமா என்பது யாருக்கும் கடைசி நிமிடம் வரை தெரியாது.

நாட்டின் எல்லாத் துறைகளும் ஸ்தம்பிதமடைந்துள்ளன. சிலவற்றில் இயல்புநிலையைப் பேணுவதற்காக அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் வெற்றியளிக்கவில்லை. 'சூம்' வகுப்புகளை இதற்கு ஓர் உதாரணமாகக் கொள்ளலாம். குறிப்பிட்ட சில மாணவர்களே இதனால் சரியான பயனைப் பெற்றுள்ளனர்.

ஏனையோர் இருக்கின்ற பொருளாதார பிரச்சினை போதாது என்று, இணைய இணைப்புகளுக்காக ரீலோட் செய்ததும், கவரேஜ் தேடி அலைந்ததுமே மீதம் என்றாகியிருக்கின்றது. இதுபோலவே, அரச துறை, தனியார் துறையின் செயற்பாடுகளும் நிர்ணயிக்கப்பட்ட உற்பத்தித் திறனைத் தரவில்லை என்பதே நிதர்சனமாகும்.

நாட்டில் கொரோனா வைரஸின் தாக்கம் இன்னும் குறையவில்லை என்றும் மாறாக மரணங்கள் அதிகரிக்கும் நிலையே காணப்படுகின்றது என்றும் சுகாதார நிபுணர்கள் தொடர்ந்து எச்சரித்து வருகின்றார்கள். இலங்கையில், இந்தியாவின் டெல்டா வைரஸும் பரவியுள்ள நிலையில், இரண்டும் கெட்டான்நிலையில் நாட்டைத் திறந்து விடுவது, பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்று கூறுகின்றது. இதன்மூலம் எதிர்காலத்தில் பொறுப்புக்கூறலை இலகுவாக்குவதற்கான களநிலைமையையும் அவர்கள் கட்டமைக்கின்றார்கள் எனலாம்.

வைரஸ் பரவலின் பாரதூரமான நிலை பற்றி பொதுமக்களை விட, ஆட்சியாளர்கள் நன்றாக அறிவார்கள். மருத்துவ துறையினரின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி நாட்டை மூடிவைக்க வேண்டிய நிர்ப்பந்தமும் அரசாங்கத்திற்கு இருக்கின்றது.

நாட்டை மூடிவைத்தால், எதிர்க்கட்சியோ மக்களோ வீதிக்கு இறங்கிப் போராடுவதையும் தடுக்கக் கூடியதாக இருக்கும். இதனைப் பயன்படுத்தி, அரசியல் குழப்பங்களையும் கட்டுக்குள் வைத்திருக்க சாதகமான நிலை ஏற்படலாம்.

ஆனால், ஏற்கெனவே தேசிய பொருளாதாரமும், ஒவ்வொரு சாதாரண குடும்பங்களின் பொருளாதாரமும் வீழ்ச்சியடைந்துள்ளது. நிவாரணத்தை வழங்குவதற்கான நிதியும் கையில் இல்லை. அரசியல் நெருக்கடிகளும் சட்டென்ற களநிலை மாற்றங்களை நோக்கி நகர்கின்றன.

பல்வேறு காரணங்களால் மக்களின் ஒத்துழைப்பும் குறைந்து போயுள்ளது; அவர்கள் வெறுத்துப் போயுள்ளனர். எனவேதான், நாட்டைத் திறப்பதா, மூடுவதா என்ற முடிவுக்கு அரசாங்கத்தால் வரமுடியவில்லை. அப்படியான தீர்மான முடிவொன்றுக்கு வருவதற்கு இன்னும் பல நாள்கள் எடுக்கலாம்.

கடிதங்கள்

பசளை தட்டுப்பாட்டால் நெற் செய்கை பாதிப்பு

திருகோணமலை மாவட்டம், கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சுங்கான் குழி பட்டியனூர் விவசாயிகள், தங்களுக்கான பசளைகளைக் கிடைக்கச் செய்யுமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

பசளை தட்டுப்பாட்டால் நெல் பயிர்கள் வளர்ச்சி குறைவடைந்து, மஞ்சள் நிறமாக மாறுவதுடன், இம்முறை விளைச்சலும் குறைவாகக் காணப்பட்டு உள்ளதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

யூரியா பசளை, களை நாசினி ஆகியவற்றின் தட்டுப்பாட்டால், தாம் பாரிய நஷ்டங்களையும் எதிர்விளைவுகளையும் எதிர்நோக்க வேண்டி உள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

பசளை தற்போது, தட்டுப்பாடாக உள்ளது, நகைகளை அடகு வைத்தே விவசாயத்தை மேற்கொள்கிறோம். இம்முறை விளைச்சல் குறைவுக்குக் காரணம், சரியான பசளை இல்லை என விவசாயிகள் அங்கலாய்க்கின்றனர். யூரியா பசளை மூலமாக, ஒரு ஏக்கருக்கு 40 தொடக்கம் 45 மூடைகளை எதிர்பார்க்கலாம். ஆனால், இம்முறை சிறுபோக நெற் செய்கையில் விளைச்சலின்மையும் வெள்ளம் போன்ற காரணத்தால் அழிவுகளையும் சந்திக்க நேரிட்டது.

எனவே, விவசாயிகள் தமது விவசாய முயற்சிகளின் ஊடாக, இன்னல்களில் இருந்து தற்காத்துக் கொள்ள சாதகமான முடிவுகளைப் பெற்றுத் தருமாறு தகுதிவாய்ந்தவர்ககளிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.

–ஹஸ்பர் ஏ ஹலீம்

புதுடெல்லி

பல்வேறு மாநிலங்களில்

‘டெல்டா பிளஸ்’ வைரஸ் கண்டுபிடிப்பு

கட்டுப்பாடுகளைத் தீவிரப்படுத்த ஏற்பாடு

மகாராஷ்டிரா, கேரளா, மத்தியப் பிரதேச மாநிலங்களில் ‘டெல்டா பிளஸ்’ வைரஸ் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளதால் அங்கு கட்டுப்பாடுகளை தீவிரப்படுத்த வேண்டும் என, மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்தியாவில் கொரோனா வைரஸ், டெல்டா வைரஸ் மரபணுவாக மாறி, பின் டெல்டா பிளஸ் என்ற வைரஸ் உருவாகியுள்ளது. இது மனிதர்களின் உடலிலுள்ள, எதிர்ப்பு சக்தியை ஏமாற்றி,

உடலுக்குள் செல்லும் திறன் கொண்டது. எனவே, எதிர்ப்பு சக்தி மிகுந்தவர்களையும் புதிய வைரஸ் எளிதில் தொற்றக்கூடும் என எச்சரிக்கப்பட்டுள்ளது. “ஒருவேளை கொரோனா தடுப்பு நடைமுறைகளை பின்பற்றாமல் அலட்சியமாக செயல்பட்டால், டெல்டா பிளஸ் வைரஸால் அடுத்த 3 அல்லது 4 மாதங்களில் இரண்டாவது அலையில் ஏற்பட்ட பாதிப்புகளை விட, கூடுதல் பாதிப்புகளை மீண்டும் சந்திக்க நேரிடும்” என, எய்ம்ஸ் இயக்குநர் ரன்தீப் குலேரியா உள்ளிட்டோர் அறிவுறுத்தி உள்ளனர். டெல்டா பிளஸ் வைரஸ் குறித்து இப்போதே மிகுந்த எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என, சி.எஸ்.ஐ.ஆர். மற்றும் அமைப்பைச் சேர்ந்த மூத்த விஞ்ஞானிகளும் தெரிவித்துள்ளனர்.

திண்டுக்கல்

காதலி முன்னிலையில்

காதலன் அடித்துக் கொலை

காதலி கண் முன் காதலன் அடித்துக் கொலை செய்யப்பட்ட சம்பவமொன்று புதுப்பட்டி கைபைபுரத்தில் இடம்பெற்றுள்ளது. இதுதொடர்பாக, நால்வரை பொலிஸார் கைது செய்தனர்.

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் அருகே புதுப்பட்டி கைபைபுரத்தைச் சேர்ந்த இளைஞன், சிறுமலையில் ஒரு தனியார் தோட்டத்தில் வேலை செய்து வந்தார். குறித்த இளைஞனும் மூங்கில்பட்டியைச் சேர்ந்த பெண்ணும் காதலித்து வந்துள்ளனர். இவர்களது காதல் விவகாரம், பெண் வீட்டாருக்கு தெரிந்ததால், அவரை வேறு ஒருவருக்கு திருமணம் செய்து வைக்க ஏற்பாடுகள் நடைபெற்றன. இதையறிந்த காதலன், இரவுநேரத்தில், நண்பர்களுடன் காதலியின் வீட்டருகே சென்று, அந்த பெண்ணை அலைபேசியில் வெளியே வரும்படி அழைத்து பேசியுள்ளார்.

இதேவேளை, அங்கு வந்த பெண்ணின் உறவினரொருவர், காதலனை கல்லால் அடித்துத் தாக்கியுள்ளார். பலத்த காயமடைந்த காதலன், மருத்துவமனைக்கு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார். கொலை தொடர்பாக, உறவினர் உட்பட நான்கு ஆண்களைப் பொலிஸார் கைது செய்து, விசாரிக்கின்றனர்.

புதுடெல்லி

கச்சா எண்ணெய் விலையேற்றத்தால்

இந்தியாவில் பெற்றோல் விலை உயர்வு

கச்சா எண்ணெய் விலை, சர்வதேச சந்தையில் அதிகரித்துள்ளதால், தான் பெற்றோல், டீசல் விலை உயர்ந்துள்ளது என, இந்தியா பெற்றோலியத் துறை அமைச்சர் விளக்கம் அளித்துள்ளார்.

பெற்றோலியத் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் செய்தியாளர்களிடம் பேசியதாவது: சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்துள்ளது. இந்த விலை ஏற்றமே நாட்டில் பெற்றோல், டீசல் விலை உயர்வுக்கு முக்கிய காரணமாக உள்ளது.

நாம் 80 சதவீத எண்ணெய் இறக்குமதி செய்கிறோம். இதனால், பெற்றோல், டீசல் விலையைக் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

புதுடெல்லி

பைசர் தடுப்பூசி பயன்படுத்த

‘ஒப்புதல்’ இறுதிக் கட்டத்தில்

இந்தியாவில் பைசர் தடுப்பூசியைப் பயன்படுத்துவதற்கு ஒப்புதல் பெறும் பணிகள் இறுதி கட்டத்தில் இருப்பதாக அந்த நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி அல்பர்ட் போர்லா தெரிவித்துள்ளார்.

இந்திய அரசாங்கத்துடன் விரைவில் இதற்கான ஒப்பந்தம் இறுதி செய்யப்படும் என்று நம்புவதாக அவர் கூறினார். இந்தியா உட்பட குறைந்த, நடுத்தர வருவாய் கொண்ட நாடுகளுக்கு 100 கோடி பைசர் தடுப்பூசிகள் இந்த ஆண்டுக்குள் வழங்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

வெளிநாடுகளில் இருந்து தடுப்பூசி இறக்குமதி செய்வதைத் துரிதப்படுத்த வேண்டும் என்று இந்திய தலைமை மருந்து கட்டுப்பாளர் அண்மையில் வலியுறுத்தி இருந்தது குறிப்பிடத்தக்கது.

‘இந்தியா எனும் அடிமை பெயர் வேண்டாம்’

நாட்டின் பெயரை இந்தியா என்பதற்குப் பதிலாக ‘பாரத்’ என்று மாற்ற வேண்டும் என பொலிவுட் நடிகை கங்கனா ரனாவத் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக நடிகை கங்கனா ரனாவத் தனது சமூக வலைத்தள பக்கத்தில் தெரிவித்திருப்பதானது,

இந்தியா என்ற பெயர் அடிமை பெயராக உள்ளது. எனவே, இதை மாற்றி நமது நாட்டின் பழைய பெயரான பாரதம் என்பதையே வைக்க வேண்டும்.

பிஎச் (பவ்), ரா (ராக்), தா (தாள்)என்ற பெயர்கள் இணைந்ததே பாரதம். எனவே பழைய பெயரான ‘பாரத்’ என்று மாற்றி, இழந்த பெருமையை மீட்போம். இவ்வாறு அவர் அதில் கூறியுள்ளார்.

சர்ச்சைக் கருத்துகளுக்காக அண்மையில் ட்விட்டர் சமூக வலைத் தளத்திலிருந்து கங்கனா நீக்கப்பட்டார். இதைத் தொடர்ந்து அவர் `கூ` சமூக வலைத்தளத்தில் இணைந்துள்ளார். அதில்தான் இந்தக் கருத்தை பதிவு செய்துள்ளார். மேலும் இந்தக் கருத்துப் பக்கத்தை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்திலும் நடிகை கங்கனா ஷேர் செய்துள்ளார்.

சென்னை

மத்திய சங்கங்களின் கூட்டுக் குழு;

விவசாயிகளுக்கு ஆதரவாக 26ஆம் திகதி ஆர்ப்பாட்டம்

புதுடெல்லியில் போராடும் விவசாயிகளுக்கு ஆதரவாக எதிர்வரும் 26 ஆம் திகதி அனைத்து மாவட்டங்கள் மற்றும் தொழில் மையங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று மத்திய சங்கங்களின் கூட்டுக் குழு அறிவித்துள்ளது.

இதுகுறித்து, அனைத்துத் தொழிற்சங்கங்கள் வெளியிட்ட கூட்டறிக்கையில் கூறியிருப்பதாவது:

டெல்லி மாநகரின் எல்லைகளில் நடைபெறும் விவசாயிகள் போராட்டம் ஜூன் 14ஆம் திகதியுடன் 200 நாள்களை நிறைவு செய்கிறது.

எதிர்வரும் 26ஆம் திகதி புகழ்பெற்ற விவசாயிகள் தலைவர் தயானந்த சரஸ்வதியின் நினைவு தினமாகும். அன்று மாநிலத் தலைநகர்களில் ஆளுநர் மாளிகை முன்பு விவசாயிகள் போராட்டம் நடத்தவுள்ளனர்என அக்கூட்டறிக்கையில் குறிபிடப்பட்டுள்ளது.

இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பால் உதவி

இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பினூடாக, நுவரெலியா மாவட்டத்தில் உள்ள நானோ ரதால்ல தோட்ட வைத்தியசாலைக்கு உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு, ரதல்ல தொழிற்சாலையில் நடைபெற்றபோது, உதவும் கரங்கள் அமைப்பின் உறுப்பினர்கள், தோட்ட முகாமையாளர், உதவி முகாமையாளர், மனித வள பெருந்தோட்ட அபிவிருத்தி நிலையத்தின் முகாமையாளர் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

டி. சந்ரு



நண்பர்கள் குழாத்தினரால் மல்லிகைத்தீவு மக்களுக்கு நிவாரணம்

‘காரைதீவு 1967ஆம் ஆண்டு நண்பர்கள் குழாம்’ என்ற அமைப்பினர் அம்பாறை மாவட்டத்தில் வாழ்வாதாரத்தையிழந்த மல்வத்தைப் பிரதேசத்திலுள்ள மல்லிகைத்தீவு கிராம மக்களுக்கு உலருணவு நிவாரணங்களை வழங்கிவைத்தனர்.

இங்கிலாந்து, அவுஸ்திரேலியா வாழ் காரைதீவு 1967 நண்பர்கள் குழாத்தினரின் அனுசரணையின்கீழ் இவ்வுலருணவு நிவாரணம் வழங்கப்பட்டது. 1967ஆம் ஆண்டு பிறந்த இந்த அமைப்பின் தலைவர் கெ.மணிச்சந்திரன் தலைமையிலான குழுவினர், 1,500 ரூபாய் பெறுமதியான உலருணவுப் பொதிகளை மல்லகைத்திவீலுள்ள 80 குடும்பங்களுக்கு வழங்கிவைத்தனர்.

காரைதீவு நிருபர் வி.ரி. சகாதேவராஜா

கல்வியறிவை மேம்படுத்துவதற்காக பாடசாலை மாணவர்களுக்கு உணவு

Save the Children அரச சார்பற்ற நிறுவனத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் வீட்டுக்கு எடுத்துச் செல்லும் உணவுப்பங்கீடுகள் (Take-Home Rations) விநியோகத்திட்டம் ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே. எம். முஸம்மில் தலைமையில் மொனராகலை மாவட்டத்தின் புத்தல, ஒக்கம்பிட்டிய, தம்பேயாய ஆரம்பப் பாடசாலையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பாடசாலை மாணவர்களின் கல்வியறிவு, கவனத்தை மேம்படுத்துவதற்காக அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் பாடசாலை மாணவர்களுக்கு உணவளிக்கும் திட்டத்தின் பேண்தகைமையை வலுப்படுத்தும் நோக்கில், குறித்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. இந்த வேலைத்திட்டத்தின் ஊடாக, பதுளை, மொனராகலை மாவட்டங்களில் 887 ஆரம்பப் பாடசாலைகளில் கல்வி பயிலும் 110,000 மாணவர்களுக்கு இந்த உணவுப் பொதிகள் பகிர்தளிக்கப்பட உள்ளன.

இந்த நிகழ்வில், மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சந்தியா அபன்வெல, மொனராகலை மாவட்டச் செயலாளர் குணதாஸ சமரசிங்க, Save the Children அமைப்பின் பிரதானிகள் கலந்துகொண்டனர்.

திருகோணமலை வழிபாட்டு தலங்களுக்கு உலருணவுப் பொருட்கள்

திருகோணமலை மாவட்ட வழிபாட்டுத் தலங்களுக்கும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கும் உலர் உணவுப் பொதிகளை விநியோகிக்கும் திட்டத்தை திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபில அத்துகோரலவால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

முதல் கட்டமாக, கந்தளாய் பிரதேசத்திலுள்ள பௌத்த விகாரைகள், கோவில்கள், பள்ளிகளில் கடமையாற்றும் மதத் தலைவர்களுக்கு உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

எப். முபாரக்

ஆப்கானிஸ்தான்

தஜிகிஸ்தான் கடவையை கைப்பற்றிய தலிபான்

ஆப்கானிஸ்தானின் தஜிகிஸ்தான் உடனான பிரதான எல்லைக் கடவையை தலிபான் கைப்பற்றியுள்ளதாக குண்டூஸ் மாகாண சபை உறுப்பினர் கலிட்டின் ஹக்மி, இராணுவ அதிகாரிகள் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளனர்.

சில பாதுகாப்புப் படைகள் தங்களது நிலைகளை கைவிட்டதுடன், முன்னரங்கைத் தாண்டி வெளியேறியுள்ளனர்.

குண்டூஸ் நகரத்திலிருந்து 50 கிலோ மீற்றர் வடக்காகவுள்ள குறித்த ஷிர் கான் பன்டாரைக் கைப்பற்றியமையானது, ஐக்கிய அமெரிக்கப் படைகள் கடந்த மாதம் முதலாம் திகதி முதல் வெளியேற ஆரம்பித்த பின்னரான மிகவும் பிரதானமான தலிபானின் முன்னேற்றமாகக் கருதப்படுகிறது. ஒரு மணித்தியால மோதலையடுத்து நேற்று முன்தினம் காலையில் ஷிர் கான் பன்டாரையும், தஜிகிஸ்தானுடனான அனைத்து எல்லைச் சோதனைச் சாவடிகளையும் தலிபான் கைப்பற்றியதாக ஹக்மி கூறியுள்ளார்.

இந்நிலையில், எல்லைக் கடவையைக் கைப்பற்றியதை தலிபான் பேச்சாளர் ஸபிஹுல்லாஹ் முஜாஹித் உறுதிப்படுத்தியுள்ளார்.

கூடாரங்கள் அகற்றல்...

கனடாவின் ஒன்ராரியோ மாகாணத் தலைநகரான டொரண்டோவிலுள்ள ட்ரினிட்டி பெல்வூட்ஸ் பூங்காவிலுள்ள வீடற்றவர்களின் கூடாரங்கள் நேற்று முன்தினம் அகற்றப்பட்ட நிலையில், நபரொருவர் பொலிஸ் அதிகாரிகளை நோக்கி சமிக்ஞை செய்கிறார்.

பிலிப்பைன்ஸ்

கொரோனாவுக்கு தடுப்பூசி செலுத்தி கொள்ளாவிடின் சிறை

கொரோனாவுக்கு எதிராக தடுப்பூசி ஏற்றிக் கொள்ள மறுப்போரை சிறைக்கு அனுப்ப போவதாக பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி றொட்றிகோ டுட்டர்ட்டே அச்சுறுத்தியுள்ளார்.

டெல்டா மாறியுடன் தொடர்புபட்ட புதிய கொரோனா தொற்றுக்கள் தொடர்பாக பிலிப்பைன்ஸின் எல்லைக் கட்டுப்பாடுகளை உயர் எச்சரிக்கையுடன் அந்நாட்டு அரசாங்கம் வைத்துள்ள நிலையிலேயே இத்தகவல் வெளியாகியுள்ளது.

ஏற்கெனவே பதிவு செய்யப்பட்ட கடந்த திங்கட்கிழமை இரவு உரை ஒன்றிலேயே, "நீங்கள் தெரிவு செய்யலாம்; நீங்கள் தடுப்பூசியைப் பெறலாம் அல்லது உங்களை சிறைச்சாலைக்கு நான் அனுப்புவேன்" என தகலொக்கில் ஜனாதிபதி டுட்டர்ட்டே தெரிவித்துள்ளார்.

இவ்வாண்டு மார்ச் மாதம் தடுப்பூசியேற்றலை பிலிப்பைன்ஸ் ஆரம்பித்த போதும், தடுப்பூசியேற்றல்கள் குறைவாகவே காணப்படுவதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

தடுப்பூசியேற்றாதவர்கள் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்றும், இந்தியாவுக்கு அல்லது ஐக்கிய அமெரிக்காவுக்குச் செல்ல வேண்டும் என ஜனாதிபதி டுட்டர்ட்டே தெரிவித்துள்ளார்.

சுவிற்ஸர்லாந்து

கொரோனா பரம்பலில்

மில்லியனர்கள் அதிகரித்தனர்

உலகில் கடந்தாண்டு ஐந்து மில்லியனுக்கும் அதிகமானோர் மில்லியனர்களாகியுள்ளனர்.

கொரோனா பரம்பல் காரணமான பொருளாதார பாதிப்புக்கு மத்தியிலேயே இது நிகழ்ந்துள்ளது. பல வறியவர்கள் இன்னும் வறியவர்களாகியுள்ள நிலையில், மில்லியனர்களின் எண்ணிக்கையானது 5.2 மில்லியனால் அதிகரித்து பூகோள ரீதியில் 56.1 மில்லியனாகக் காணப்படுவதாக கிரடிட் சுய்ஸே ஆராய்ச்சி கண்டுபிடித்துள்ளது.

இத்தாலி

'41 மில்லியன் பேர் பஞ்சத்தின் விளிம்பில்'

43 நாடுகளைச் சேர்ந்த 41 மில்லியன் பேர் பஞ்சத்தை எதிர்கொள்ளும் உடனடி ஆபத்தில் இருப்பதாக உலக உணவுத் திட்டம் எச்சரித்துள்ளது.

நான்கு நாடுகளிலுள்ள ஏறத்தாழ 600,000 பேர் ஏற்கெனவே பஞ்சம் போன்ற நிலைமைகளை எதிர்நோக்குகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

போர்கள், காலநிலை மாற்றம், பொருளாதார அதிர்ச்சிகள் பட்டினியை அதிகரித்துள்ளதுடன், அடிப்படைப் பொருள்களுக்கான விலை அதிகரிப்பானது உணவுப் பாதுகாப்பில் ஏற்கென உள்ள அழுத்தங்களை மேலும் அதிகரித்துள்ளதாக அறிக்கை ஒன்றில் உணவுத் திட்டம் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

எதியோப்பியா, மடகஸ்கார், தென் சூடான், யேமன், நைஜீரியா மற்றும் பேர்க்கினா பாஸோவின் சில பகுதிகளில் பஞ்சம் போன்ற நிலைமைகள் காணப்படுகின்றன.

சீனா

தாய்வான் நீரிணையூடாக

கப்பல் சென்றதை கண்டித்தது சீனா

ஐக்கிய அமெரிக்காவை பிராந்தியத்தின் மிகப் பெரிய பாதுகாப்பு ஆபத்து உருவாக்குநராக சீனா நேற்றுக் கண்டித்துள்ளது.

தாய்வானையும், சீனாவையும் பிரிக்கும் நீரிணையூடாக ஐ. அமெரிக்க போர்க் கப்பல் ஒன்று சென்றமையை அடுத்தே இக்கருத்தை சீனா வெளிப்படுத்தியுள்ளது.

தாய்வான் நீரிணையூடாக வழமையான பரிமாற்றத்தை புர்கே வகை இலக்கு வைக்கும் ஏவுகணை நாசகாரியான யு.எஸ்.எஸ் கேர்டிஸ் வில்புர் நேற்று முன்தினம் மேற்கொண்டதாக ஐ. அமெரிக்க கடற்படையின் ஏழாவது படைப்பிரிவு தெரிவித்துள்ளது.

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்; இந்தியாவும் நியூசிலாந்தும்

இறுதிப் போட்டிக்கு கடும் பிரயத்தனம்

சர்வதேச கிரிக்கெட் சபையின் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியின் முன்னிலைக்கு இந்தியாவும், நியூசிலாந்தும் போராடி வருகின்றன.

கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்த இப்போட்டியில் கடந்த திங்கட்கிழமை ஆட்டமானது மழை காரணமாக முழுமையாக இடம்பெறவில்லை.

இந்நிலையில், நேற்று முன்தின ஐந்தாம் நாளை, தமது முதலாவது இனிங்ஸில் 2 விக்கெட்டுகளை இழந்து 101 ஓட்டங்களைப் பெற்றவாறு நியூசிலாந்து ஆரம்பித்தது.

சிறிது நேரத்திலேயே மொஹமட் ஷமியிடம் றொஸ் டெய்லரை நியூசிலாந்து இழந்ததுடன், குறிப்பிட்ட நேரத்தில் ஹென்றி நிக்கொல்ஸை இஷாந்த் ஷர்மாவிடம், உடனேயே பி.ஜெ. வட்லிங்கை ஷமியிடம் இழந்து தடுமாறியது.

பின்னர் குறிப்பிட்ட நேரத்தில் கொலின் டி கிரான்ட்ஹொம்மும், அடுத்து வந்த கைல் ஜேமிஸன் 21 ஓட்டங்களுடன் ஷமியிடம் விழ நியூசிலாந்து மேலும் தடுமாறியது.

இவற்றுக்கு மத்தியிலும் அணித்தலைவர் கேன் வில்லியம்ஸன் நிலைத்து நின்ற நிலையில் பின்னர் 49 ஓட்டங்களுடன் இஷாந்திடம் அவரும் வீழ்ந்ததுடன், குறிப்பிட்ட நேரத்தில் நீல் வக்னரும் இரவிச்சந்திரன் அஷ்வினிடம் வீழ்ந்தார்.

இந்நிலையில், அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி 30 ஓட்டங்களை பெற்ற டிம் சௌதி, இறுதியாக இரவீந்திர ஜடேஜாவிடம் விழ சகல விக்கெட்டுகளையும் இழந்து தமது முதலாவது இனிங்ஸில் 249 ஓட்டங்களையே நியூசிலாந்து பெற்றது.

பதிலுக்கு, தமது முதலாவது இரண்டாவது இனிங்ஸில் களமிறங்கிய இந்தியா நிதானமாக ஆரம்பித்தபோதும் ஷுப்மல் கில்லை சிறிது நேரத்தில் டிம் சௌதியிடம் இழந்தது.

இதையடுத்து ரோஹித் ஷர்மாவும், செட்டேஸ்வர் புஜாராவும் இனிங்ஸை நகர்த்திய நிலையில், 30 ஓட்டங்களுடன் சௌதியிடம் ரோஹித் வீழ்ந்தார்.

அந்தவகையில், நேற்று முன்தின ஐந்தாம் நாள் முடிவில் 2 விக்கெட்டுகளை இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றவாறு தமது இரண்டாவது இனிங்ஸில் இந்தியா காணப்படுகின்றது. தற்போது களத்தில், புஜாரா 12, அணித்தலைவர் விராட் கோலி எட்டு ஓட்டங்களுடன் காணப்படுகின்றனர்.

பி.எஸ்.எல்:

இறுதிப் போட்டியில் பெஷாவர் ஸல்மி

பாகிஸ்தானின் உள்ளூர் இருபதுக்கு - 20 தொடரான பாகிஸ்தான் சுப்பர் லீக்கின் (பி.எஸ்.எல்) இறுதிப் போட்டிக்கு பெஷாவர் ஸல்மி தகுதி பெற்றுள்ளது.

ஐக்கிய அரபு அமீரகத் தலைநகர் அபு தாபியில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற இஸ்லாமபாத் யுனைட்டெட்டுடனான இரண்டாவது வெளியேற்றப் போட்டியில் வென்றமையைத் தொடர்ந்தே இறுதிப் போட்டிக்கு பெஷாவர் தகுதி பெற்றுள்ளது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பெஷாவர்

இஸ்லாமபாத்: 174/9 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: ஹஸன் அலி 45 (16), கொலின் மன்றோ 44 (29) ஓட்டங்கள். பந்துவீச்சு: வஹாப் றியாஸ் 2/35 [4], மொஹமட் இர்ஃபான் 1/21 [4], அமட் பட் 1/26 [4], ஷொய்ப் மலிக் 0/7 [1], மொஹமட் இம்ரான் 1/34 [4])

பெஷாவர்: 177/2 (16.5 ஓவ.) (துடுப்பாட்டம்: ஹஸரத்துல்லா ஸஸாய் 66 (44), ஜொனதன் வெல்ஸ் ஆ.இ 55 (43), ஷொய்ப் மலிக் ஆ.இ 32 (10) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஆகிஃப் ஜாவிட் 0/18 [3], பாஹீம் அஷ்ரஃப் 0/20 [3])

போட்டியின் நாயகன்: ஹஸரத்துல்லா ஸஸாய்

பதவி விலகிய யுனிஸ் கான்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் துடுப்பாட்டப் பயிற்றுவிப்பாளர் பொறுப்பிலிருந்து, அவ்வணியின் முன்னாள் தலைவரான யுனிஸ் கான் விலகியுள்ளார்.

ஆறு மாதங்களுக்கு முன்பே பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் இரண்டாண்டு ஒப்பந்தத்தை கான் ஏற்றுக் கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், இரு தரப்பு இணக்கத்திலேயே யுனிஸ்கான் விலகியுள்ள நிலையில், ஏன் விலகினார் என இரு தரப்பும் கருத்து எதனையும் தெரிவித்திருக்கவில்லை.



பரிஸ் ஸா ஜெர்மைனிலிருந்து

வெளியேறுவார் மப்பே?

பிரெஞ்சு லீக் 1 கால்பந்தாட்டக் கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனின் முன்களவீரரான கிலியான் மப்பேயை வெளியேறுமாறு, அக்கழகம் தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

பரிஸ் ஸா ஜெர்மைனுடனான 22 வயதான மப்பேயின் ஒப்பந்தமானது அடுத்தாண்டு முடிவடைகின்ற நிலையில் அவர் புதிய ஒப்பந்தத்தில் இன்னும் கைச்சாத்திடவில்லை.

இந்நிலையில், மப்பேயைக் கைச்சாத்திட, ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்ரிட் ஆர்வம் காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

யூரோ கிண்ணத் தொடர்:

விலகல் முறையிலான சுற்றில் குரோஷியா

யூரோ கிண்ணத் தொடரின் விலகல் முறையிலான சுற்றுக்கு குரோஷியா தகுதி பெற்றுள்ளது.

ஸ்கொட்லாந்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 3-1 என்ற கோல் கணக்கில் வென்றதைத் தொடர்ந்தே விலகல் முறையிலான சுற்றுக்கு குரோஷியா தகுதிப் பெற்றுள்ளது. குரோஷியா சார்பாக, நிகொலா விளாசிச், லூகா மோட்ரிச், இவான் பெரிசிச் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். ஸ்கொட்லாந்து சார்பாகப் பெறப்பட்ட கோலை கலும் மக்கிரேகர் பெற்றிருந்தார்.

இப்போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் குழுவில் இரண்டாமிடத்தைப் பெற்றே விலகல் முறையிலான சுற்றுக்கு குரோஷியா தகுதி பெற்றிருந்தது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 24 ஜூன் 2021, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.